GOKULAM

டிசம்பர் 2007 ✧ விலை ரூ.8/- ✧ 80 பக்கங்கள்

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!



கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்

201) 




214) 

220) 

202) 

208) 

215) 

221) 

203) 

209) 

216) 

222) 

204) 

210) 

217) 

223) 

205) 

211) 

218) 

224) 

206) 

212) 

219) 

225) 

207) 

213) 

தொடர்ச்சி
3-ஆம்
அட்டையில்...



கோகுலம்



டிசம்பர் 2007 மலர் : 25 இதழ் : 11

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் - பாரதியார்





கலை, கலாசார சிறப்பிதழ்!

குட்டீஸ் கோகுலம் 24, 36, 56, 64, 73

உள்ளே...

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட்லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர்:
சீதா ரவி

உதவி ஆசிரியர்:
ஆரணி யுவராஜ்

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522 / 2225 0623
2225 1324

தொலைநகல் :
044 - 2225 1021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.96/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 25 யுஎஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!

அன்புள்ள உங்களுக்கு...

அறிவியல் எவ்வளவு வேகமாக முன்னேறுகிறதோ அந்தளவுக்கு நாகரிகமும் வளர்ந்து உலகம் சுருங்குகிறது. ஆயினும், ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு கலாசாரம் இருக்கும். நாகரிக வளர்ச்சியால் அதில் சிறிது மாற்றம் ஏற்படலாம். ஆயினும் முற்றிலும் மாறி விடாது. மாறவும் விடக்கூடாது. ஏனெனில், அதுதான் நம்மை உலக மக்களிடம் அடையாளப்படுத்தும்.

நமது இந்திய கலாசாரம் குறித்து உலக மக்கள் வியந்து பாராட்டுவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். நாளை நீங்கள் பெரியவர்களாக வளரும்போது நாகரிகம் மேலும் வளர்ந்திருக்கும். படிப்பதற்கோ, வேலை காரணமாகவோ



போற்றி வளர்ப்போம்!

வெளிநாடுகளில் வசிக்கலாம். எங்கு இருந்தாலும் நமது கலாசாரத்தை மறக்காதீர்கள். நமது முன்னோர்கள் வகுத்த ஒழுக்க நெறிகளைக் கடைபிடியுங்கள். அவை நம்மை மேலும் உயர்த்தி சென்ற இடத்தில் சிறப்பைச் சேர்க்கும். மேலும் நமது கலைகளையும் போற்றி வளர்ப்போம்.

நண்பர்களுக்கு கிறிஸ்துமஸ் வாழ்த்துகள்!

அன்புடன்
கோகு

என்னோட கதையை நானே சொல்றேன். இது ஒரு வீணையின் சுயசரிதை!



ஹலோ குட்டீஸ். நான் யார் பேசறேன்னு தெரியுமா? ஒரு சின்ன க்ளூ! சரஸ்வதி தேவியின் கையிலிருக்கும் இசைக்கருவி! புரிந்து கொண்டீர்கள் அல்லவா? கரெக்ட்! நான்தான் வீணை பேசுகிறேன்.

வீணையாகிய நான், ஒரு நரம்பு இசைக்கருவி. மீட்டுக் கருவி ரகம் என்றும் என்னை அழைப்பார்கள். மிகப் பழங்காலந்தொட்டே நான் புழக்கத்தில் இருந்தாலும் பதினேழாம் நூற்றாண்டில், அதாவது தஞ்சையை ஆண்டு வந்த





தஞ்சாவூர் தங்கம்!

▪ மாலதி சந்திரசேகரன்

ரகுநாத மன்னரின் காலத்தில்தான் தற்பொழுது இருக்கும் அமைப்பைப் பெற்றேன். என்னை உருவாக்குவது எவ்வளவு சிரமம் தெரியுமா? நன்கு பக்குவப்பட்ட பலா மரத்தினால் நான் உருவாக்கப்படுகிறேன். தந்தி இசைக் கருவியைச் செய்யும் கலைஞர் ஒருவர் மட்டுமே முழு கவனத்தோடு என்னை அமைப்பார்.

உங்களுடைய அங்கங்களுக்கு தனித்தனி பெயர்கள் இருப்பதுபோல் என் அவயங்களுக்கும் பெயர்கள் உண்டு. குடம், சுரைக்காய், தண்டி, மாடச்சட்டம், மேற்பலகை, மேளச்சட்டம், மெழுகுச் சட்டம், யாழிமுகம், பிரகடைகள், குதிரைகள், லங்கர், நாகபாசம், இருபத்து நான்கு மெட்டுக்கள் என்பனவாகும்.



எனக்கு ஏழு தந்திக் கம்பிகள் உண்டு. நான்கு தந்திகள் வாசிப்பதற்கும், மீதம் மூன்று தந்திகள் சுருதி லயத்துக்காகவும், தாளக் கட்டுக்காகவும் உபயோகப்படுத்தப்படுகின்றன. இந்தத் தந்திகளை மீட்டும்பொழுது, நான் விரல்களை புண்ணாக்கி விடுகிறேனாம். அதனால், 'மீட்டி' அல்லது 'நெளி' என்னும் சுற்றுக் கம்பியினை விரல்களில் பொருத்தி என்னை மீட்டுகிறார்கள்.

தண்டி என்று கூறப்படும் நீளமான பகுதியின் ஒரு புறத்தில் குடமும், மற்



றொரு புறத்தில் யாழி முகமும் எனக்குண்டு. யாழி முகப் பகுதியின் அருகிலேயே சுரைக்காய் அமைந்திருப்பதைப் பார்த்திருப்பீர்கள் இல்லையா?

என்னை இசைக்கும் கலைஞர், தரையில் அமர்ந்தபடிதான் மீட்டுவார். குடம் பகுதி தரையிலும், யாழி முகப் பகுதியில் இருக்கும் சுரைக்காயைத் தாங்கியாகவும் உபயோகிப்பார்கள். இதை வெறும் தாங்கி என்று நினைத்து விடாதீர்கள், ஒலியைப் பெருக்கும் சாதனமும் இதுதான்!

நான் மூன்று வகைப் படுவேன்.

1. சரஸ்வதிவீணை, 2. ருத்ர வீணை, 3. விசித்ர வீணை. தென் இந்தியாவில் எல்லோரும் சரஸ்வதி வீணையைத்தான் உபயோகப்படுத்துகிறார்கள்.




சரஸ்வதி வீணையின் உடலைப் பலா மரத்தாலும், விசித்ர வீணையின் உடலைத் தேக்கு மரத்தினாலும் செய்கிறார்கள். ஒரே



* சரஸ்வதி வீணை!

இசைக் கருவிகளின் தாய் என்று கூறப்படும் ருத்ர வீணைக்கு ஒரு சிறப்பு உண்டு...





* விசித்ர வீணை! (மேலே)
* ருத்ர வீணை! (கீழே)

மரத்துண்டினால் என்னுடைய தண்டியையும், குடத்தையும் உருவாக்கினால் 'ஏகாண்ட வீணை' என்று சொல்வார்கள். அப்பொழுது எனக்கு மவுசு அதிகம்.

'இசைக் கருவிகளின் தாய்' என்று கூறப்படும் ருத்ர வீணைக்கு ஒரு சிறப்பு உண்டு. அதாவது, இந்தப் பெயரில் இருக்கும் என்னை மீட்டிதான் பரமசிவனும், பார்வதியும் நடனமாடுவார்களாம்.

என் பிறப்பிடம் தஞ்சை என்பதில் எனக்கு மிகுந்த கர்வமுண்டு. கோலாரில் தங்கம் வெட்டி எடுப்பதைப் போல் தஞ்சையில் வெட்டி உருவாக்கப்படும் தங்கம் நான். கச்சேரிகளில் முக்கிய கருவியாக நான் பெருமைப் படுத்தப்படுகிறேன்.

அட்டையில் : **செல்வி பவித்ரா**

படம் : **ஸ்ரீஹரி**

புதிய பகுதி

உறுப்பினர் பக்கம்

ஹாய் ஃப்ரண்ட்ஸ்! நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த 'உறுப்பினர் பக்கம்' இதோ தொடங்கிவிட்டது. கோகுலம் சிறுவர் சங்கத்தில் உறுப்பினராகியுள்ள வாசகர்களுக்கான சிறப்புப் பகுதியிது! உங்களுக்குள்ளிருக்கும் பல்வேறு திறமைகளை இங்கே வெளிப்படுத்தலாம். இனி ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து வெளி யாகும். இப்பகுதி குறித்து மேலும் விவரங்கள் 27 - ஆம் பக்கத்தில். படைப்புகளை அனுப்புங்கள்; பங்கேற்று அசத்துங்கள்!



கவிதை

வாழ்வோம் என்றும் மகிழ்வாக!

செடியை விட்டுப் பிரிந்தாலும்
மணக்க மலர் மறப்பதில்லை
கொடியை விட்டுப் பிரிந்தாலும்
சுவைக்க காய் மறுப்பதில்லை

விண்ணை விட்டு வந்தாலும்
தாகம் தீர்க்கும் மழையாக
மண்ணை நீங்கி வந்தாலும்
மின்னும் கழுத்தில் நகையாக

துன்பம் சூழ்ந்து வந்தாலும்
சிரிப்போம் என்றும் மலராக
வாட்டம் வந்து சூழ்ந்தாலும்
வாழ்வோம் என்றும் மகிழ்வாக!



வே. முத்துராஜ், உறுப்பினர் எண்:76
பன்னிரண்டாம் வகுப்பு, இராமசுவாமி பிள்ளை
மேல்நிலைப் பள்ளி, வல்லம்.

ஜோக்ஸ்!



ஆசிரியர் : எவ்வளவு சொன்னாலும் படிக்க மாட்டேங்கறியே, மனசுல என்னதான் நினைச்சுட்டிருக்கே?

ராமு : 'படிக்காத மேதை'யாகணும்னு!

- கு.நித்யானந்தன், உறுப்பினர் எண்.3, பத்தாம் வகுப்பு, பிஷப் ஹீபர் மேல்நிலைப் பள்ளி, கொடாப்பு கிராமம்

ஆசிரியை : நான், உன்னோட பாட்டி மாதிரின்னு சொல்றியே, எப்படி?

கலா : எங்க பாட்டி, பாட்டுப் பாடித் தூங்க வைப்பாங்க. நீங்க பாடம் நடத்தித் தூங்க வைக்கறீங்க.

- கு.நித்யானந்தன்



ஓவியம்




க.கனகசுப்பு லெட்சுமி,
உறுப்பினர் எண்:64
ஒன்பதாம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி,
மூலைக்கரைப்பட்டி



என்.வைஷ்ணவி,
உறுப்பினர் எண்: 96
ஐந்தாம் வகுப்பு,
வேதவல்லி வித்யாலயா,
வாலாஜாப்பேட்டை

அது இவங்கதான்!



மைக்கேல் பாரடே



ஜோசப் பிளாக்

1. ஒலி அலைகளைக் கண்டறிந்தவர் - ஹெர்ட்ஸ்

2. மின்காந்தத் தூண்டலைக் கண்டறிந்தவர் - மைக்கேல் பாரடே

3. ஹைட்ரஜன் வாயுவைக் கண்டறிந்தவர் - ஹென்றி காவண்டிஷ்

4. ஹீலியம் வாயுவைக் கண்டுபிடித்தவர் - சர்.வில்லியம் ராம்சே

5. ராக்கெட் என்ஜினைக் கண்டுபிடித்தவர் - கோடார்ட் (அமெரிக்கா)

6. அணு கடிகாரத்தைக் கண்டுபிடித்தவர் - வில்லார்டு எப்.லிபி

7. கரியமில வாயுவைக் கண்டறிந்தவர் - ஜோசப் பிளாக்

8. ஆல்பா கதிர், பீட்டாக் கதிர்களைக் கண்டுபிடித்தவர் - ரூதர்போர்டு

9. வானொலியைக் கண்டுபிடித்தவர் - மார்கோனி


● அ.அபிராமி,
உறுப்பினர் எண்: 54,
நான்காம் வகுப்பு, ஊராட்சி
ஒன்றிய தொடக்கப் பள்ளி,
திருப்புலிவனம்



மார்கோனி



ரூதர்போர்டு



வில்லியம் ராம்சே

துறவி கேட்ட கேள்வி!

மன்னார்சாமியும் ரங்கசாமியும் பக்கத்துப் பக்கத்து வீட்டுக்காரர்கள். இரண்டு வீட்டுக்கும் இடையே ஒரு பெரிய மாமரம் பூத்துக் காய்த்துக் கொண்டிருந்தது. மரத்திலிருந்து கிடைக்கும் மாம்பழங்களை இருவருமே பயன்படுத்திக் கொண்டிருந்தனர்.


ஒரு சமயம் மரத்திலிருந்த அத்தனை மாங்காய்களும் திருடுப் போய்விட்டன. மாங்காயைத் திருடியவன் அவசரத்தில் மன்னார்சாமியின் வீட்டுப் பக்கத்தில் ஐந்தாறு காய்களை விட்டுச் சென்றுவிட்டான். விடிந்ததும் மரத்தைப் பார்த்த இருவருமே திடுக்கிட்டனர். மன்னார்சாமியின் வீட்டு புல் தரையில் மாங்காய்களைப் பார்த்த ரங்கசாமி, மன்னார்சாமிதான் இரவோடு இரவாக மாங்காய்களைத் திருடியிருக்கிறான் என்று நினைத்து, சண்டை போட ஆரம்பித்தான்.

மன்னார்சாமி சும்மா இருப்பானா? ரங்கசாமி திருடிவிட்டு, தன் மீது பழியைப் போடுவதாக சண்டை போடலானான்.

மறுநாளே இரு வீடுகளுக்கிடையே முள்வேலி அமைத்துக்கொண்டனர். மன்னார் வீட்டுப் பக்கம் இருக்கும் கிளைகளிலிருந்து கிடைக்கும் மாம்பழங்களை அவன் அனுபவிக்க வேண்டும் என்றும், அதேபோன்று ரங்கசாமி வீட்டுப் பக்கம் இருக்கும் கிளைகளிலிருந்து கிடைக்கும் விளைச்சலை இவன் அனுபவித்துக் கொள்ளலாம் என்றும் முடிவு எடுக்கப்பட்டது.

சில மாதங்களுக்கு பிறகு வாசல் பக்கம் வந்த மன்னார்சாமியின் பார்வை அவனை அறியாமலேயே மாமரத்தின் மீது தாவியது. சில வினாடிகள்





த.ஜானகி

உற்று நோக்கினான். தன் வீட்டுப் பக்கத்தில் காய்த்திருக்கும் மாங்காய்களைவிட ரங்கசாமி வீட்டுப் பக்கம் காய்கள் அதிகமாக காய்த்திருப்பதைப் பார்த்ததும் மனத்தில் பொறாமை ஏற்பட்டது.

மறுநாள் இரவே யாருக்கும் தெரியாமல் ஒரு ஆளை வைத்து ரங்கசாமி வீட்டுப் பக்கம் காய்த்திருக்கும் மாங்காய்களைப் பறித்துப் பக்கத்து ஊரில் நடக்கும் சந்தையில் விற்க ஏற்பாடு செய்துவிட்டான்.


உண்மையை அறிந்த ரங்கசாமிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. கோபத்தை அடக்க முடியவில்லை. என்ன செய்வது? அந்த ஆளை எப்படி பழி வாங்குவது என்று யோசித்துக் கொண்டிருந்தவனுக்கு மன்னார்சாமி

சொந்த கிராமத்துக்குச் சென்றிருக்கிறான் என்பதை அறிந்ததும் ஓர் ஆளை வைத்து மன்னார் வீட்டுக் காய்களைப் பறித்து விற்றுவிட்டான்.

ஊரிலிருந்து திரும்பிய மன்னார் சாமி திடுக்கிட்டான்.

"என்ன தைரியம் இருந்தால், நான் ஊரில் இல்லாதபோது என் வீட்டு மாங் காய்களைப் பறித்திருப்பாய்? நாளைக்கு என்ன செய்கிறேன் பார்!" என்று பொறு மியபடி உள்ளே சென்றான்.

மறுநாள் காலை கையில் பெரிய அரிவாளுடன் வெளிப் பட்டான் மன்னார்சாமி.



"ஏய், ரங்கசாமி! இப்ப நான் மரத்திலே ஏறி உன் வீட் டுப் பக்கம் இருக்கும் கிளை களை எல்லாம் வெட்டிச் சாய்க்கப் போறேன்" என்று சத்தம் போட்டபடி மரத்துக்கு அருகில் வந்தான்.

"நீ வெட்டினால் என் கை பூ பறிச்சுக் கிட்டு இருக்குமா? இதோ... நானும் உன் பக்கத்துக் கிளைகளை வெட்டப் போறேன்" என்று கத்தியபடி, கையில் அரிவாளுடன் ரங்கசாமியும் மரத்தை நெருங்கினான்.

அப்போது -

"நில்லுங்கள்" என்று குரல் கேட்டு இருவரும் திரும்பிப் பார்த்தனர்.

அங்கே துறவி ஒருவர் நின்று கொண்டிருந்தார்.

"நான் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்லிவிட்டு மரத்தை வெட்டுங்கள்" என்றார் அவர்.

"கேளுங்கள்" என்பதுபோல இரு வரும் துறவியைப் பார்த்தனர்.

"இந்த மாமரம் உயர்ந்ததா அல்லது மனிதன் உயர்ந்தவனா?"

"சந்தேகம் என்ன மனிதன்தான் உயர்ந்தவன்" இது மன்னார்சாமி பதில்.

"எப்படி?"

"மனிதனுக்கு ஆறு அறிவு இருக்கே."

"அப்படியா! இந்த மரம் மறைமுக மாக என்னிடம் என்ன சொல்கிறது தெரி யுமா? மனிதனைவிட நான்தான் உயர்ந் தவன் என்கிறது."

"எப்படி?"

"என்னைக் கல்லால் அடித் தவனுக்கும்கூட வலியைப் பொறுத்துக்கொண்டு, சுவை யுள்ள காயையோ பழத் தையோ தருகிறேன். இந்த இரண்டு மனிதர்களுக்கும் நான் நிறைய காய் கள், பழங்கள் எல்லாம் கொடுத்து வருகிறேன். இவர்களுக்கு நன்மை யைச் செய்து கொண்டிருக்கும் என்னை ஏன் வெட்ட வருகிறார்கள்? என்று மரம் கேட்கிறது. நீங்கள் வெட்டக் கூடிய அளவுக்கு இந்த மரம் செய்த கொடுமை என்ன? மனிதன் ஏன் மரங்களை அழிக்கிறான்? பதில் சொல் லுங்கள்?"

இருவரும் தலை குனிந்தனர். தங்கள் தவறு புரிந்தது. ஆத்திரம் அடங்கியது. பொறாமை இருள் விலக ஆரம்பித்தது. அரிவாளைக் கீழே போட்டனர்.

"எங்களை மன்னித்து விடுங்கள்" கோரசாக இருவரும் கூறினர்.

நீங்கள் வெட்டக் கூடிய அளவுக்கு இந்த மரம் செய்த கொடுமை என்ன? மனிதன் ஏன் மரங்களை அழிக்கிறான்?

‘யுவஸ்ரீ கலா பாரதி’ விருது



மதுரை பாரதி யுவ கேந்திரா சார்பில் இசை, படிப்பு, ஓவியம், சமூகப்பணி, பரதநாட்டியம், பேச்சு, கவிதை, விளையாட்டு UC MAS, ABACUS ஆகிய துறைகளில் ஏதேனும் ஒரு துறையில் சிறந்து விளங்குகிற L.K.G முதல் 12ம் வகுப்பு வரையிலான மாணவ, மாணவியருக்கு **‘யுவஸ்ரீ கலா பாரதி’** என்ற விருதினையும் கல்லூரி மாணவ மாணவியருக்கு **‘சுவாமி விவேகானந்தர்’** விருதினையும் ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட வாரியாக வழங்கி வருகிறோம். ஒவ்வொருவருக்கும் வெள்ளிக்கேடயம் மற்றும் விருதுக்கான பெரிய அளவிலான பட்டயமும், ஸ்படிக மாலையும் வழங்கப்படும்.

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியில் உள்ள அனைத்து மாவட்டங்களைச் சார்ந்த பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியருக்கு இவ்விருது வழங்கும் நிகழ்ச்சி அந்தந்த மாவட்டத்தில் நடைபெறும். LKG முதல் +2 மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் பிற துறைகளில் பரிசு பெற்றவர்கள் இவ்விருதுக்கு விண்ணப்பிக்கலாம். மேலும் கடந்த மூன்று ஆண்டுகளில் 10ஆம் வகுப்பு மற்றும் ப்ளஸ் 2 பொதுத்தேர்வில் 80% மற்றும் அதற்கு மேல் மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியர்களும் தங்களின் மதிப்பெண் சான்றிதழின் ஜெராக்ஸ் பிரதியுடன் **நெல்லை பாலு, நிறுவனர்-பாரதி யுவ கேந்திரா, G-28, சாந்தி சதன் குடியிருப்பு, கோச்சடை, மதுரை-16. செல் 94439-30815, 94426-30815.** என்ற முகவரிக்கு ஒவ்வொருவருக்கும் வீட்டு முகவரி, தொலைபேசி எண்ணுடன் கூடிய ரூ.10 அஞ்சல் தலை ஒட்டப்பட்ட சுய விலாசமிட்ட கவருடன் அனுப்பிட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தேர்வு செய்யப்பட்டவர்களின் விவரம் அவர்களது வீட்டு முகவரிக்கு அனுப்பப்படும். விருது வழங்கும் விழாவில் அவரவருக்கு எடுக்கப்படும் புகைப்படச் செலவை ஒவ்வொருவரும் கண்டிப்பாக ஏற்க வேண்டும்.

ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிற ‘வித்யா சேவா ரத்னா’ விருதுக்கு நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளியைச் சார்ந்த (Matric & State board, CBSE) முதல்வர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள் அவர்களைப்பற்றிய தன் விபரக்குறிப்பினை (Bio-Data) எங்கள் முகவரிக்கு அனுப்பிட அன்புடன் வேண்டுகிறோம். நிகழ்ச்சி அந்தந்த மாவட்டத்தில் நடைபெறும்.

மனதை அள்ளும் கிறிஸ்துமஸ் மரம்!



வீடுகளில் அலங்கரிக்கப்பட்ட கிறிஸ்துமஸ் மரம் வைக்கும் பழக்கம் எப்போது, எப்படி ஏற்பட்டது என்று உங்களுக்குத் தெரியுமா?

தற்போது காணப்படும் அலங்கரிக்கப்பட்ட கிறிஸ்துமஸ் மரங்கள், பல கிறிஸ்துமஸ் பாடல்கள், பல ஆடை வகைகள், பல சடங்குகள் எல்லாம் ஜெர்மனியில் இருந்துதான் தொடங்கின என்பது சிலரது கருத்து.

ஃபர் (Fir) மரத்துக்கும் கிறிஸ்துவ மதத்துக்கும் சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன்பாகவே தொடர்பு இருப்பதாகக் கூறப்படுகிறது. கிறிஸ்துமஸ் மரத்தை வீட்டுக்குள் கொண்டு வந்து அலங்கரித்த பெருமை, மார்ட்டின் லூதர் என்பவருக்குக் கொடுக்கப்படுகிறது

1500 ஆம் வருட காலகட்டத்தில் வாழ்ந்த இவர், ஒருமுறை கிறிஸ்துமஸ் தினத்துக்கு முந்தைய மாலை நேரத்தில், பனிகள் படர்ந்திருந்த ஒரு மரத்தின் ஒரு கிளையை வெட்டிக்கொண்டு வந்து வீட்டில் வைத்து, அதில் மெழுகுத் திரிகளை இணைத்து, அந்த மெழு



கமலநாதன்



குத் திரிகளை ஏற்றினார் என்றும், வீட்டில் உள்ள சிறுவர் சிறுமியர்களுடன் தமது சந்தோஷத்தைப் பகிர்ந்துக் கொண்டார் என்றும் சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

அவர் ஏற்றி வைத்த மெழுகுத் திரிகள், கிறிஸ்து பிறந்த சமயத்தில் வானத்தில் காணப்பட்ட நட்சத்திரங்களையும், ஒளியையும் குறிப்பிடுகின்றன என்றும் கூறுகிறார்கள்.

இதற்குப் பிறகு உள்ள கால கட்டங்களில்தான் ஜெர்மனியில் அலங்கரிக்கப்பட்ட கிறிஸ்துமஸ் மரங்களை வைக்கும் பழக்கம் ஏற்பட்டது என்பது வேறு சிலரது கருத்து.

தமது இளமைப் பருவத்தில் ஜெர்மனியில் இருந்த தமது உறவினர்களைக் காண இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த விக்டோரியா மகாராணி 1840களில் அடிக்கடி ஜெர்மனி செல்வாராம். அப்படிப்பட்ட கால கட்டத்தில் அந்நாட்டைச் சேர்ந்த இளவரசர் ஆல்பர்ட்டை நேசித்துத் திருமணம் செய்துகொண்டாராம். இங்கிலாந்துக்கு வந்த இளவரசர் தம்முடன் அலங்கரிக்கப்பட்ட ஒரு கிறிஸ்துமஸ் மரக்கிளை ஒன்றையும் அரண்மனைக்குக் கொண்டு வந்தாராம். அதைப் பார்த்த இதர பிரபுக்களும் அதைப் பற்றி கேள்விப்பட்ட இதர குடிமக்களும் தாங்களும் அவ்வாறு தங்கள் வீட்டில் அலங்கரிக்கப்பட்ட கிறிஸ்துமஸ் மரங்களை வைப்பதை வழக்கமாக்கிக் கொண்டனர் என்றும் சரித்திரம் கூறுகிறது.

ஜெர்மனியில் இருந்து இதர நாடுகளுக்குக் குடியேறியவர்கள் தாங்கள் வசித்த இடங்களில் இந்தப் பழக்கத்தை ஏற்படுத்த அதைப் பார்த்த அமெரிக்க மக்களும் கிறிஸ்துமஸ்க்கு ஃபர் மரத்தை அலங்கரித்து விழா கொண்டாட ஆரம்பித்தனர்.



தற்சமயம் கிறிஸ்துமஸ் மரம் வைக்காத அமெரிக்கக் குடும்பங்



களே இல்லை என்று சொல்லலாம். இந்தப் பழக்கத்தைப் பார்த்த, அமெரிக்காவில் வசிக்கும் இதர மதங்களைச் சேர்ந்தவர்களும் மத சம்பிரதாயமாகக் கருதாமல் தங்கள் வீடுகளில் கிறிஸ்துமஸ் மரங்களை வைக்கிறார்கள்.

கிறிஸ்துமஸ் சமயத்தில் பல குடும்பங்களிலும் இயேசுவின் பிறப்பைக் காண்பிக்கும் காட்சிகள் பொம்மைகளின் உதவியுடன் வைக்கப்படுகின்றன

சில சாலைகளின் முகப்புகளிலும் இந்தக் காட்சிகள் காணப்படுகின்றன. பெரிய சாலைகளிலிருந்து பிரிந்து உள்ளே செல்லும் வழிகளின் முகப்பில் உள்ள புல் தரையில் இயேசுவின் பிறப்பைச் சித்திரிக்கும், காட்சிகள் உறுதியான பிளைவுட் பலகைகளால் செய்யப்பட்டு, அழகாக வண்ணம் தீட்டப்பட்டுக் காட்சிக்கு வைக்கப்படுகின்றன. டிசம்பர் மாதம் தொடங்கியதும் இவற்றைக் காணலாம்.





இன்னும் சில இடங்களில் சுற்றிலும் அழகிய பூக்கள் வளர்க்கப்பட்டு, சிறிய குளம் ஒன்று உருவாக்கப்பட்டு, அதன் அருகில் இரும்புக் கம்பிகளால் செய்யப்பட்ட மான்கள் நீர் அருந்துவதைப் போன்ற காட்சிகள் காணப்படுகின்றன.

கிறிஸ்துமஸ் சமயத்தில் அதிக அளவில் சிவப்பு நிறத்திலும், வெள்ளை நிறத்திலும் உள்ள பொருட்களைக் காணலாம்.

சிவப்பு நிறம் அறிவுத் திறனையும், வெள்ளை நிறம் களங்கமற்ற மனத்தையும் தெரிவிப்பதாகக் குறிப்பிடுகிறார்கள்.

மொத்தத்தில் இத்தகைய கிறிஸ்துமஸ் மரங்கள் அனைவரின் மனத்தையும் கொள்ளையடிக்கிறது. ○


தெனாலிராமன்!
கதை: ஜிங்கிள் பெல் கிரியேஷன்ஸ்
தமிழ் வடிவம்: ராதிகா ரகு
நாதுராம் தோட்டத்தில் தெனாலிராமனும், நண்பர்களும்...
ஜோதூ! ஜாக்கிரதையா கவனி தோட்டக்காரர் வந்துவிடுவார்.
நாதுராம் வருகிறார்.
அடேய், பொடிப் பசங்களா!
பசங்களா, தொலைஞ்சீங்க!
நாதுராம் வந்துவிட்டார்.
ஓடு! ஓடு!
பொடியா, நல்லா மாட்டினே!
ஐயோ! யாராவது காப்பாத்துங்க!



திருட்டுப் பயலே! வா, மன்னர்கிட்ட கூட்டிக்கிட்டுப் போறேன்.
ஐயோ, வேண்டாம்!
நான் உங்க நஷ்டத்தை ஈடு கட்டறேன்.
எப்படி?
எங்கப்பாகிட்ட கேளுங்க. நீங்க கேட்கற பணத்தை எங்கப்பா தருவார்.
யாரு உங்கப்பா?
என்னது உங்களுக்கு ராம்சேத்தை தெரியாதா?
தெரியும்! நல்லா தெரியும். நல்ல பண வேட்டைதான் நமக்கு.
நான் கேட்கறதை அவர் கொடுப்பாரா?
கண்டிப்பா! ஆனா, நீங்க சரியா கேட்கணும்.


எங்கப்பாகிட்ட நான் இங்க இருக்கேன்னு சொல்லாதீங்க.
சரி! சரி!
ராம்சேத் பணம் இருந்தா மட்டும் போதாது. பையனை ஒழுங்கா வளர்க்கத் தெரியணும்.
என்ன?
உங்க பையன் நண்பர்களோடு வந்து என் தோட்டத்து மாம்பழங்களைத் திருடிட்டான்.
ம்...ம்...மெதுவா சொல்லு.
நீங்க எனக்கு ஆயிரம் ரூபாய் தாங்க.
சரி! சரி! தரேன்...
இந்த விஷயத்தை யாருகிட்டயும் சொல்லாதே.
பயல் வீட்டுக்கு வரட்டும்.
ராம்சேத் பையன் வீட்டுக்கு வந்தான்.
இல்லை! இல்லை... நான் மாங்காய் திருடவே யில்லைப்பா...


அப்படின்னா வா போய்க் கேட்கலாம்.
இந்தப் பையன் இல்ல. உங்க பெரிய பையன்.
என்னது பெரிய பையனா? எனக்கு இருக்கிறது ஒரே ஒரு பையன்தான்!
நான் கொடுத்த பணத்தைத் திருப்பிக் கொடு. அதோடு கேவலமாப் பேசினதுக்கு நஷ்டஈடு தரணும்.
என்...னது
...இல்லைன்னா ராஜாகிட்ட புகார் குடுப்பேன்.
ஐய்யோ! அதெல்லாம் வேண்டாம்.
அந்தப் பயல் நல்லா ஏமாத்திட்டானே!
ஹி...ஹி..

டாக்டர் பக்கம்

டாக்டர் கு.கணேசன்



நூடுல்ஸுக்கு நோ; இட்லிக்கு எஸ்!

நம்ம அருண் ஆறாம் வகுப்பில் படிக்கிறான். அவன் பெற்றோர் தனியார் நிறுவனத்தில் பணிபுரிகிறார்கள். அருணை வீட்டில் கவனித்துக் கொள்வது பாட்டி தான். அருண் படிப்பில் சுட்டி என்றாலும் உணவு சாப்பிடும் விஷயத்தில் அதிக அக்கறை செலுத்தமாட்டான். இதனால் பாட்டிக்குக் கவலை. ஒரு முறை பாட்டி பேரனை குடும்ப மருத்துவரிடம் அழைத்துச் சென்றார்...

பாட்டி : வணக்கம் டாக்டர். என் பேரன் சரியாவே சாப்பிட மாட்டேன்கிறான். முக்கியமா காலையில் பள்ளிக்குப் போகும்போது பெரும்பாலும் சாப்பிடுவதே இல்லை.

டாக்டர் : அடடே, இது ரொம்ப தப்பாச்சே! காலைச் சாப்பாட்டை கண்டிப்பா மிஸ் பண்ணக்கூடாது அருண். பள்ளியில் ஆசிரியர் நடத்தும் பாடங்களை நன்கு கவனிக்கணும், படிக்கணும், விளையாடணும். அதற்கு உன் உடலில் தேவையான சக்தி இருக்கணும்.

அதற்கு சத்துள்ள சரிவிகித உணவை வேளை தவறாமல் சாப்பிடனும்.

அருண் : காலையில் பள்ளிக்குக் கிளம்பும் அவசரத்தில் பசியே இருக்க மாட்டேன்கிறது டாக்டர். அதுக்கு என்ன செய்றது?

டாக்டர் : உனக்கு மட்டுமில்லை, அருண். இந்தக் குறைபாடு பல பள்ளிக் குழந்தைகளுக்கு இருக்கு. காரணம், பெரும்பாலான பள்ளிகள் காலையில் எட்டு மணிக்கே தொடங்குறாங்க. வீட்டில் ஆறு மணிக்கே கிளம்ப வேண்டிய கட்டாயம். இதனால் பலர் காலையில் சாப்பிடாமல் பள்ளிக்குச் செல்லும் நிலை ஏற்படுகிறது. இதன் காரணமாக, குழந்தைகளுக்குச் சத்துக்குறைவு ஏற்பட்டு உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்து விடுகிறது. இது படிப்பையும் பாதிக்குது. காலையில் பள்ளிக்குக் கிளம்பும்போது பசி இல்லை என்றால் மதிய உணவோடு காலை உணவையும் எடுத்துக்கொண்டுபோய் பள்ளியில் வகுப்பு தொடங்குவதற்கு முன்பு சாப்பிடணும்.

பாட்டி : எங்கே டாக்டர் இவன் சத்துள்ள உணவைச் சாப்பிடுகிறான்? அந்தக் காலத்திலே நாங்க படிக்கும் போது காலையில கம்மங்கஞ்சியில் தயிர் ஊற்றிச் சாப்பிடுவோம். மதியத்துக்கு உளுந்தங்களியும் பருப்பும் கீரையும் எடுத்துட்டுப் போவோம்.

டாக்டர் : உண்மைதான், நல்ல சத்துள்ள உணவைச் சாப்பிடும் பழக்கம் உங்க காலத்துல இருந்தது. மாவுச்சத்து, புரதச்சத்து, கொழுப்புச்சத்து, வைட்டமின்கள் என்று எல்லா சத்துகளும் நீங்க சொன்ன உணவுகள்ல இருக்கு. அதனாலதான் இந்த வயசுலேயும் ஆரோக்கியமா இருக்கீங்க. ஆனால், இப்போ நம்முடைய உணவுக் கலாசாரமே மாறிப் போச்சு. குழந்தைகள் சிப்ஸ், பீட்ஸா, பர்கர், நூடுல்ஸ், குளிர்பானங்கள், எண்ணெயில் வறுத்த உணவுகள் போன்றவற்றைத்தான் விரும்பிச் சாப்பிடுகிறார்கள்.

அருண் : உண்மைதான் டாக்டர். எனக்கு நூடுல்ஸ்னா ரொம்ப இஷ்டம்... கீரை பிடிக்கவே பிடிக்காது.

டாக்டர் : சரி, அருண். நீ விரும்பிச் சாப்பிடும் உணவுகளில் உனக்குத் தேவையான எல்லா சத்துகளும் இருக்க வேண்டியது முக்கியம் இல்லையா? உதாரணமா, நூடுல்ஸ் மைதா மாவில் தயாரிக்கப்படுகிறது. அரிசியில் உள்ள அளவுக்கு மைதாவில் சத்து கிடையாது. நூடுல்ஸில் வாசனைக்காக பாமாயில் உபயோகிக்கிறாங்க. இது இதயத்துக்கு ஆகாது. அதோட பொட்டாசியம் கார்பனேட் மோனோசோடியம் குளுட்டமேட் என்று கெமிக்கல்ஸ் வேறு சேர்க்கிறாங்க. எண்ணெயில் வறுத்த உணவுகளை அடிக்கடி சாப்பிட்டால் வயிற்றுக்



“எனக்கு நூடுல்ஸ்னா ரொம்ப இஷ்டம்... கீரை பிடிக்கவே பிடிக்காது!”

"நீ விரும்பிச் சாப்பிடும் உணவுகளில் உனக்குத் தேவையான எல்லா சத்துகளும் இருக்க வேண்டியது முக்கியம்!"

கோளாறுகளை உண்டு பண்ணும்.

அருண் : அப்படியா, டாக்டர்? இதெல்லாம் எனக்குத் தெரியாதே டாக்டர்!

பாட்டி : இன்னொரு விஷயம், அருண் டீ.வி. பார்த்துக்கிட்டே சாப்பிடு றான். இது கெடுதல் இல்லையா, டாக்டர்?

டாக்டர் : கண்டிப்பா! இரண்டு வித மான கெடுதல் உண்டாகுது. குழந்தை கள் கொழுப்பு நிறைந்த நொறுக்குத் தீனிகளை அளவுக்கு அதிகமாகச் சாப் பிட்டுவிடுகிறார்கள். அதிக நேரம் டீ.வி முன்னாலே உட்காருவதாலே விளை யாடுவது குறைகிறது. இதனால் உடற் பயிற்சி இல்லாமல் போகிறது. அதே



நேரத்தில் சாப்பிடும்போது உண வின் மீது கவனமா இருந்தா வயிற் றில் செரிமான நீர்கள் சரியாகச் சுரந்து, உணவு நன்றாகச் செரிக்கப் படும். பசி எடுக்கும். உணவுச்சத்துகள் முறையாக உடலில் சேரும்.


அருண் : சரி, டாக்டர்... இனிமேல் என் பழக்கத்தை மாற்றிக் கொள்கிறேன். எந்தெந்த உணவை எப்படிச் சாப் பிடணும்னு சொல்லுங்க!

டாக்டர் : குட்! காலையில அவ சரமா சாப்பிடறதுக்கு பருப்பு சாதமும் பாலும் உதவும். சாதம் பிடிக்கலையா? இட்லி, சட்னி, சாம்பார், ஆரஞ்சு அல்லது ஆப்பிள் பழச்சாறு சாப்பிட லாம் அல்லது நெய் சப்பாத்தியோட ஆம்லேட் சேர்த்துக் கொள்ளலாம். மதியத்துக்கு இரண்டு காய்கறிகளோட ஏதாவது ஒரு சாதம். சாயங்காலம் பள்ளி முடிந்து வரும்போது கொண் டக்கடலை, சுண்டல், சாலட், காய்கறி சேர்த்த சப்பாத்தி ரோலர், தேனில் ஊற வைத்த பேரீச்சை இப்படி ஏதாவது சாப்பிடலாம். இரவில் காலையில் சாப்பிட்டது போல. உறங்கப்போவதற்கு முன்பு பாலும் வாழைப்பழமும் சாப்பிட ணும். வைட்டமின் நிறைந்த பழம், காய்கறி, கீரைகளைச் சாப்பிடலாம். தானிய வகைகளை அதிகமாக்கிக் கொண்டால் உடலுக்குத் தேவையான சக்தி கிடைக்கும். இப்படி சத்துள்ள உணவுகளைச் சரியான அளவில் முறையா சாப்பிடும்போது அவற்றில் உள்ள சத்துகள் நமக்கு நோய் தடுக்கும் மருந்தாகப் பயன்பட்டு நம் ஆரோக் கியத்தைக் காக்கும்.

பாட்டி, அருண் : ரொம்ப நன்றி, டாக்டர். நீங்க சொன்ன முறைகளைக் கடைப்பிடிக்கிறோம்! ●

புள்ளிகளை இணையுங்கள்!

குட்டீஸ் கோகுலம்



ஒன்று முதல் 50 வரையிலான புள்ளிகளை இணைத்தால் இங்கே இருப்பது யாரென்று தெரியும்!

கோகுல

கோகுலம் சிறுவர் சங்கம்

பட்டியல்

வணக்கம் குழந்தைகளே!

'கோகுலம் சிறுவர் சங்கம்' உறுப்பினர்கள் பட்டியல் இந்த இதழிலும் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது மற்றும் மூன்றாவது அட்டைகளில் இடம் பெற்றுள்ளன. ஒரே பெயரிலேயே சிலர் இரண்டு கூப்பன்களை அனுப்புகிறார்கள். கூப்பன் அனுப்பிய அனைவரின் புகைப்படமும், பட்டியலும் நிச்சயம் வெளியாகும். ஆகவே ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்ப வேண்டியதில்லை. நண்பர்களை அறிமுகம் செய்யலாம்!

அன்புடன், **ஆசிரியர்**



201) பு.குமரன், ஆறாம் வகுப்பு, இராமசுவாமி பிள்ளை மேனிலைப் பள்ளி, இலஞ்சி.

202) ஆர்.மோனிஷா, பத்தாம் வகுப்பு, புனித மரியன்னை உயர்நிலைப் பள்ளி, கோத்தகிரி.

203) சி.சுகந்தன், எட்டாம் வகுப்பு, டி.ஏ.வி.பெல் பள்ளி, இராணிப்பேட்டை.

204) ஆர்.ரம்யா, பன்னிரண்டாம் வகுப்பு, புனித மரியன்னை மகளிர் மேனிலைப் பள்ளி, நீலகிரி.

205) இரா.நந்தகுமார், ஒன்பதாம் வகுப்பு, அரசு ஆண்கள் பள்ளி, கடத்தூர்.

206) கே.ஜி.யமுனா, நான்காம் வகுப்பு, ஹில்டன் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, பழைய குற்றாலம்.

207) ச.விஜய், எட்டாம் வகுப்பு, கிரீன்பார்க் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, நாமக்கல்.

208) ர.தீபசங்கரி, எட்டாம் வகுப்பு, ஸ்ரீவெங்கடேஸ்வரா வித்யாலயா, கோபி.

209) வி.எஸ்.ஜகதீஸ், யு.கே.ஜி, காம்பியன் ஆங்கிலோ இந்தியன் பள்ளி, திருச்சி.

210) சி.நிவேதிதா, நான்காம் வகுப்பு, அருள் சாசுவதாலயா மேனிலைப் பள்ளி, பொன்நகர்.

211) வெ.பிரானேஷ், ஆறாம் வகுப்பு, எஸ்.ஆர்.டீ. யூனிவர்சல் பள்ளி, பு.புளியம்பட்டி.

212) ஜே.வி.ஞானயுக்தா, மூன்றாம் வகுப்பு, நிர்மலா மெட்ரிகுலேஷன் பள்ளி, சிதம்பரம்.

213) பி.ஆதித்யா, இரண்டாம் வகுப்பு, விவேகானந்தா வித்யாலயா, முத்தூர்.

214) பி.அபிஷேக், நான்காம் வகுப்பு, விவேகானந்தா வித்யாலயா, முத்தூர்.

215) எம். வைஷ்ணவி, ஏழாம் வகுப்பு, புனித வளவனார் மேனிலைப் பள்ளி, நாகர்கோவில்.

216) ச.காயத்ரி, எட்டாம் வகுப்பு, கோனிஃபர் மெட்ரிகுலேஷன் பள்ளி,

சாலை அகரம்.

217) செ.ராமராஜன், பத்தாம் வகுப்பு, அரசினர் மேனிலைப் பள்ளி, புல்வாய்க்கரை.

218) சு.பேச்சியம்மாள், ஏழாம் வகுப்பு, அரசு மேனிலைப் பள்ளி, மூலைக்கரைப்பட்டி.

219) ஜி.சித்தார்த், நான்காம் வகுப்பு, சிருஷ்டி வித்யாஷ்ரம், காட்பாடி.

220) ந.இசக்கியம்மாள், எட்டாம் வகுப்பு, கு.ரா.அரசு மேனிலைப் பள்ளி, ரெட்டியார்பட்டி.

221) எம்.சதாசிவ விக்னேஷ்,......., ஸ்ரீ ஆனந்த் ஜெயின் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, மேற்கு தாம்பரம்.

222) தே.வரதகிருஷ்ணன், ஒன்பதாம் வகுப்பு, டேவிட் சிரோமணி மெட்ரிக் பள்ளி, ஒசூர்.

223) ந.அர்ச்சனா, இரண்டாம் வகுப்பு, கன்யாகுமரி பப்ளிக் பள்ளி, மகாதானபுரம்.

224) ஈ.தினேஷ்ராஜ், ஐந்தாம் வகுப்பு, விவேகானந்தா வித்யாலயா, சென்னை - 118.

225) ஈ.சந்தோஷ், ஏழாம் வகுப்பு, விவேகானந்தா வித்யாலயா, சென்னை - 118.

226) அ.ஸ்ரீவர்த்தினி, இரண்டாம் வகுப்பு, கோமதி நர்சரி பிரைமரி பள்ளி, திருநெல்வேலி.

227) அ.சிந்தூரி, ஏழாம் வகுப்பு, தூய சவேரியார் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, திருநெல்வேலி.

228) ஜீ.வெங்கடரங்கநாதன், ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீ சங்கர வித்யாலயா மெட்ரிக் மேனிலைப் பள்ளி, சென்னை.

229) பா.சௌந்தர்யா, இரண்டாம் வகுப்பு, கிளேஸ்புரூக் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, சேலம்.

230) பா.ஐஸ்வர்யா, நான்காம் வகுப்பு, கிளேஸ் புரூக் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, சேலம்.

231) பா.சங்கரநாராயணன், ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீரேணுகாதேவி மேனிலைப் பள்ளி, நெய்க்காரபட்டி.

232) ஆர்.விக்னேஷ், முதல் வகுப்பு, எஸ்.ஆர்.டி.எஃப்.விவேகானந்தா வித்யாலயா, சென்னை - 44.



233) எம்.ஏ.மானஸா,....., வேளாங்கன்னி மெட்ரிகுலேஷன் சில்வர்ஜுப்ளி மேனிலைப் பள்ளி, சென்னை - 117.

234) செ.பாண்டியராஜன், பன்னிரண்டாம் வகுப்பு, துறைமுக மேனிலைப் பள்ளி, தூத்துக்குடி.

235) ஐ.ஜனனி, ஐந்தாம் வகுப்பு, ஸ்ரீநிவாச வித்யாலயா மெட்ரிக் மேனிலைப் பள்ளி, உடுமலைப்பேட்டை.

236) இரா.சுதர்சன், இரண்டாம் வகுப்பு, வித்யா நிகேதன் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, இராசிபுரம்.

237) மோ.மோனிகா, எட்டாம் வகுப்பு, பெரியார் மணியம்மை பெண்கள் மேனிலைப் பள்ளி, திருச்சி.

ஹலோ குட்டீஸ்!



நீங்கள் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகி விட்டீர்களா? உங்களுக்காகவே **'உறுப்பினர் பக்கம்'** என்ற பகுதி ஆரம்பிக்கப்படுகிறது. ஓவியம், கதை, கவிதை, ஜோக், அறிவியல் செய்திகள் எதுவாக இருந்தாலும் அனுப்புங்கள். உங்கள் பெயர், முகவரியுடன் மறக்காமல் உறுப்பினர் எண்ணையும் குறிப்பிடுங்கள். தகுதியானவை பிரசுரிக்கப்படும். பரிசு உண்டு! அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கோகுலம்
(உறுப்பினர் பக்கம்),
47- NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32.

238) பழ.முருகப்பன், பதினொராம் வகுப்பு, ஸ்ரீசங்கரா வித்யாலயா, கிழக்கு தாம்பரம்.

239) பழ.உண்ணாபிரியா, ஆறாம் வகுப்பு, சீதாதேவி கரோடியா ஹிந்து வித்யாலயா, கிழக்கு தாம்பரம்.

240) க.தினேஷ், பதினொராம் வகுப்பு, விவேகானந்தா மேனிலைப் பள்ளி, திருப்பராய்துறை.

241) ஜி.வி.மதுபாலா, ஏழாம் வகுப்பு, சா.இ.நா.எத்தல் ஹார்வி பெண்கள் மேனிலைப் பள்ளி, சாத்தூர்.

242) ம.லோகேஷ், பன்னிரண்டாம் வகுப்பு, ஆண்கள் மேனிலைப் பள்ளி, செவ்வாய்பேட்டை.

243) எம்.சாய்பிரசாத், எட்டாம் வகுப்பு, பொன்னையா ராமஜெயம் பள்ளி, காட்டுத்தோட்டம்.

244) எம்.சாய்பிரபு, எட்டாம் வகுப்பு, பொன்னையா ராமஜெயம் பள்ளி, காட்டுத்தோட்டம்.

245) பா.சுகன்யா, பதினொராம் வகுப்பு, எஸ்.ஜி.ஆர்.கிருஷ்ணம்மாள் மேனிலைப் பள்ளி, கோவை.

246) கு.ரம்யா, நான்காம் வகுப்பு, ஸ்ரீமதி சுந்தரவல்லி நினைவுப்பள்ளி, சென்னை.

247) ஆர்.யுவராஜ்,................. ஜவஹர் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, நெய்வேலி.

248) எம்.பி.தாரிணி, ஏழாம் வகுப்பு, விவேகானந்தா வித்யாலயா, குரோம்பேட்டை.

249) ச.கவின்குமார், ஆறாம் வகுப்பு, ஸ்ரீரங்கா வித்யாலயா, செங்குட்டைக்காடு.

250) ந.சுதா, ஐந்தாம் வகுப்பு, சாரான் தக்காள் பிரைமரி பள்ளி, திருநெல்வேலி.



தெரியுமா?

ஜப்பான்



● ஜப்பானுக்கு இன்னொரு பெயர் நிப்பான். இதன் தலைநகரம் டோக்கியோ.

● ஜப்பானியர்களுக்கு நான்கு மற்றும் ஒன்பது ஆகியவை ராசியில்லாத எண்கள். வயதான ஜப்பானியர்கள் இந்த எண்களுடன் சம்பந்தப்பட்ட எதையும் தொடமாட்டார்கள்.


● கடலுக்கடியில் அமைக்கப்பட்டுள்ள உலகின் மிக நீளமான போக்குவரத்து சுரங்கப்பாதை ஜப்பானில்தான் உள்ளது. பெயர்: சைகான் சுரங்கப்பாதை.


● ஜப்பானிய மொழிக்கு உலகில் எட்டாவது இடம். உலகில் 175 மில்லியன் மக்கள் இம்மொழியைப் பேசுகிறார்கள். ஜப்பானில் ஜப்பான் மொழி தவிர கொரிய, சீன, போர்ச்சுக்கீசிய மொழிகளும் பேசப்படுகின்றன.

● ஜப்பானின் மொத்தப் பரப்பளவு 3,78,000 சதுர கி.மீ. இது உலக நிலப்பரப்பில் 0.3 சதவிகிதம் மட்டுமே. பரப்பளவில் ஜெர்மனி, இத்தாலி நாடுகளைவிட ஜப்பான் பெரியது.

● உலகில், மிக அதிக எண்ணிக்கையில் 'ரோபோ' எனும் இயந்திர மனிதர்களைக் கொண்ட நாடு ஜப்பான். இங்கு 310 பேருக்கு ஒருவரிடம் ரோபோ உள்ளது.

● உலகின் மிகப் பெரிய நகரம் டோக்கியோ. இதன் மக்கள் தொகை இரண்டு கோடியே 65 லட்சம். ஜப்பானின் மொத்த மக்கள் தொகையில்









இருபது சதவிகிதத்தினர் இங்கு வசிக்கின்றனர்.

● ஜப்பானியர்கள் முதியவர்களை பெரிதும் மதிப்பவர்கள்.

● புத்தாண்டு வாழ்த்துகளை அனுப்புவதில் ஜப்பானியர்களுக்கு ஆர்வம் அதிகம். ஒவ்வொரு வருடமும் இவர்கள் அனுப்பும் புத்தாண்டு வாழ்த்து அட்டைகளின் எண்ணிக்கை முப்பத்தைந்து பில்லியன்.

● ஜப்பானில் நான்கு கோடியே எண்பது லட்சம் குடும்பங்கள் தங்கள் வீடுகளில் செல்லப் பிராணிகளை வளர்க்கின்றனர். 2003 ஆம் ஆண்டின் கணக்குப்படி வீட்டில் வளர்க்கும் நாய்களின் எண்ணிக்கை ஒரு கோடியே பதிமூன்று லட்சம்.

● ஜப்பானியர்கள் மேலிருந்து கீழாக எழுதுவார்கள்.

- ஆர். மீனாட்சி, ஏழாம் வகுப்பு,
அண்ணா ஜெம்
மேல்நிலைப் பள்ளி
சென்னை



முருகா! முருகா!

கதை:
என். சொக்கன்

படங்கள்:
பிள்ளை





ஒரு காட்டில் ஏகப்பட்ட மிருகங்கள் சந்தோஷமாக வாழ்ந்து வந்தன. அவற்றில் ஒரு யானையும் முயலும் ரொம்ப ஃப்ரெண்ட்ஸ்! ஒன்றின்மீது மற்றொன்று உயிரையே வைத்திருந்தது.

ஒருநாள், யானைக்கு உடம்பு சரியில்லாமப் போச்சு. பயங்கர சளி, ஜுரம்! 'அச்சு அச்சு'ன்னு அது போட்ட தும்மல்ல காடே அதிருச்சு. மூணு நாளாகியும் சரியாகலை.





முயலுக்கு ரொம்ப வருத்தமாப் போச்சு. 'எப்படா இந்த யானைக்கு உடம்பு சரியாப் போகும்? விளையாடறதுக்கு யாருமில்லையே'ன்னு நினைச்சது.

முயல் காட்டுக்குள்ளே இருக்கிற முருகர் கோயிலுக்குப் போச்சு. ''சாமி சாமி, என் ஃப்ரெண்டுக்கு உடம்பு சீக்கிரமா குணமாகணும். அதுக்கு நீதான் அருள் புரியணும்''னு வேண்டிக்கிச்சு.





''சரி, நான் உனக்கு ஹெல்ப் பண்றேன். பதிலுக்கு நீ என்ன செய்வே?''ன்னு கேட்டார் முருகர் உம்மாச்சி.

''அந்த யானை மேலேயே ஏறி வந்து மொட்டை அடிச்சுக்கறேன்''னுது முயல்.

முருகர் யானையை நினைச்சார். அடுத்த நிமிஷம் 'ஸ்விட்ச்' போட்ட மாதிரி யானைக்கு உடம்பு சரியாப் போச்சு! ஜாலியா எழுந்து விளையாட ஆரம்பிச்சுடுச்சு.





அடுத்தநாள், ரெண்டு பேரும் முருகர் கோயிலுக்கு வந்து மொட்டை அடிச்சுக்கிட்டாங்க.

அடுத்த மாசம் முயலுக்கு உடம்பு சரியில்லாமப் போச்சு. கவலையில மூழ்கிப்போன யானைக்கு முருகர் உம்மாச்சி ஞாபகம் வந்தார்.

உடனே அந்த யானை முருகர் கோயிலுக்குப்போய் பிரார்த்தனை செஞ்சது. அடுத்தநாளே, முயலுக்கு உடம்பு சரியாகிடுச்சு. யானை தன்னோட பிரார்த்தனையை முயல்கிட்டே சொல்லிச்சு:





''உன்னை மாதிரியே நானும் உனக்கு சீக்கிரமா குணமானா உன் மேலே ஏறிவந்து மொட்டை அடிக்கிறதா வேண்டிக்கிட்டிருக்கேன்''னு சொல்லிச்சு யானை. அவ்வளவுதான், முயல் ஓடியே போச்சு!



'செஸ்' ராஜா!



இராஜபாளையம், மகரிஷி வித்யா மந்திர் மெட்ரிக் மேனிலைப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படிப்பவர் **அரசன் சோலைகுமார்**. விருதுநகர் மாவட்ட அளவில் நடைபெற்ற செஸ் போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்றுள்ளார். தவிர, யோகாவிலும் சாதனைகள் புரிந்துள்ளார். நாளைய 'விஸ்வநாதன் ஆனந்த்'தாக வளரவும், பெயருக்கேற்ப அரசனாக உயரவும் கை குலுக்குவோம்!






விருது இளவரசி!



இராணிப்பேட்டை, டி.ஏ.வி.பெல் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படிப்பவர் **ராஜ்யஸ்ரீ**. தபால் தலை சேகரிப்பில் அனைவரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தி, பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார். 'இந்திய சுதந்திரப் போராட்ட வரலாறு' என்ற தலைப்பிலான அஞ்சல் தலை சேகரிப்பில் தமிழக முதல்வர் மு.கருணாநிதி அவர்களிடம் பரிசு பெற்றுள்ளார். இதுபோல் மேலும் பல பரிசுகளை, பல தலைவர்கள் கரத்தால் பெற கரவொலி எழுப்புவோம்!



தாய்லாந்து நாடோடிக் கதை



ருசியான

ஒரு காலத்தில் குளவியும் தேனீயும் மன்னன் கருடனிடம் வேலை பார்த்து வந்தன. ஒருமுறை கருடன், ''உலகிலேயே ருசியான உணவு எதைச் சாப்பிடுவதால் கிடைக்கிறது? இருவரும் கண்டுபிடித்து வாருங்கள். யார் சொல்லும் உணவு அதிக ருசியோ, அவரை ஆஸ்தான மந்திரியாக்குவேன்'' என்றது.

குளவியும், தேனீயும் ருசி பார்க்கக் கிளம்பின.

குளவி சொன்னது, ''இதோ பார் தேனீ, நான் ஒவ்வொரு உயிரினமாகக் கொட்டிக் கொட்டி ருசி பார்த்து ஒரு மாதத்துக்குப் பிறகு உன்னை இதே இடத்தில் சந்திக்கிறேன். அதற்குள் நீயும் கண்டுபிடித்து வந்து என்னிடம் சொல். பிறகு இருவருமாக மன்னனிடம் போய்க் கூறுவோம்''என்றது தேனீயும் 'சரி'யென்று சொல்லிக் கிளம்பியது.

குளவி ஒவ்வொரு பிராணியையும் கொட்டிக் கொட்டி அதன் இரத்தத்தை நாக்கால் ருசி பார்க்கத் துவங்கியது. ஒரு கட்டத்தில் அது கொடுக்கால் மனிதனைக் கொட்டி இரத்தத்தை உறிஞ்சியது. 'அடேயப்பா, மனித இரத்தம் என்ன ருசி! என்ன ருசி! மன்னனிடம் மனிதன்தான் ருசி என்று சொல்ல வேண்டும்' என எண்ணிக் கொண்டது.

தேனீ சோம்பேறியாகத் திரிந்து ஒரு மாத காலத்தை எப்படியோ கழித்துவிட்டு, மனத்தில் தோன்றியதை மன்னனிடம் சொல்லிக் கொள்ளலாம் என நாட்களை எண்ணியது.

ஒரு மாதம் முடிந்தது. குளவியும் தேனீயும் சொல்லி வைத்துக்கொண்டபடி சந்தித்தன. தேனீக்கு தவிப்பு அதிகமாகியது. தேனீயைக் கண்டதுமே குளவி கடகடவென்று பேச ஆரம்பித்தது. ''தேனீயே! உலகிலேயே சிறந்த ருசி தரும் உணவு எது தெரியுமா? மனித இனத்தின் ஆணும் பெண்ணும்



வி. ஜெயலட்சுமி

தான். நான் ஒவ்வொரு பிராணியாகக் கொட்டிக் கொட்டி இரத்தத்தை உறிஞ்சி நாக்கால் ருசி பார்த்தேன்.



“தேனீயே! உலகிலேயே சிறந்த ருசி தரும் உணவு எது தெரியுமா? மனித இனத்தின் ஆணும் பெண்ணும்தான்.”

நான் கண்டுபிடித்தவரை மனிதர்கள் தான் படு ருசி... மன்னனிடம் சொல்ல வேண்டும். அது சரி, நீ யாரையெல்லாம் ருசி பார்த்தாய்?சொல்! சொல்'' என்று கேட்டது. தேனீக்கு இதொன்றும் காதில் விழவேயில்லை. எப்படியாவது மனிதனைக் காப்பாற்ற வேண்டும் என்று நீர் மானித்துக் கொண்டு பேச ஆரம்பித்தது.

''நான் பார்த்தது இருக்கட்டும். நீ இவ்வளவு தூரம் கண்டுபிடித்தவரை சந்தோஷம். இருந்தாலும் எனக்கொரு சந்தேகம். நீ எப்படி கண்டுபிடித்தாய் என்பதை எனக்கு நேர்மகமாக விளக்கு வாயா?''

குளவி உடடினை, எப்படி ருசி பார்ப்பது என்பதைச் செய்து காட்டு வதற்காக வாய் திறந்து நாக்கை நீட்டியது. இதுதான் சமயமென்று தேனீ, தனது கொடுக்கால் குளவியின் நாக்கை ஒரு வெட்டு வெட்டியது. இதுவரை சுகமாக நாக்கோடு வளைய வந்த குளவி கண நேரத்தில் அதைப் பறி கொடுத்துத் தவித்தது!

ஒப்புக்கு நீலிக் கண்ணீர் வடித்த தேனீ 'மன்னித்துக்கொள்' என்று மட்டும் சொல்லிவிட்டு, குளவியுடன் அரசன் கருடனைச் சென்றடைந்தது.

கருட மன்னன் கேட்டதற்கெல்லாம் குளவியால் 'பே...பே' என்று தான் பதிலளிக்க முடிந்தது. நாக்கு பறிபோய் விட்டது அல்லவா? பாவம்! ஆனால் தேனீ, அரசன் தன் பக்கம் கேள்வி கேட்டதும் பணிச்சென்று, தான் போட்ட திட்டப்படி ''மன்னா, பாம்புதான் படு ருசி. ருசியோ ருசி!'' எனக் கூசாமல் பொய் சொன்னது. ஆஸ்தான மந்திரி யானது!

அன்றிலிருந்து கருடனுக்கு மிகவும் பிடித்த உணவாக பாம்பு உள்ளது. ∩

உணவு!





குட்டீஸ் கோகுலம்

வெட்டுங்கள்! ஒட்டுங்கள்!!

இங்குள்ள அழகான படத்திலிருந்து மூன்று துண்டுகள் தனியே உள்ளன. அவற்றை வெட்டி, சரியான இடங்களில் ஒட்டுங்கள்!











இங்கே மடித்து கத்தரிக்கவும்

இங்கே பின் செய்யவும்

மினி கோகுலம்

படங்கள் : பிள்ளை

தொகுப்பு
ப.இனியன்
பத்தாம் வகுப்பு,
ஜெய்கோபால் கரோடியா
தேசிய மேல்நிலைப் பள்ளி,
சென்னை.



15

யானை ஏற்றம்!

* சமூகத்தில் பழகும் முறையை அறிந்திருத்தல்.
* போர்க்கலை, போர் வியூகம், ஆயுதங்களைப் பயன்படுத்துதல், குதிரை, யானை ஏற்றங்களில் தேர்ச்சி.
* உடற்பயிற்சியில் தேர்ச்சி.
* உடல் அமைப்பு இலக்கணம் குறித்த அறிவு.



வாய்ப்பாட்டு!



* வாய்ப்பாட்டு.
* நடனம்.
* இசைக் கருவிகளின் இசையோடு சேர்ந்து ஆடிப்பாடும் பயிற்சி.
* இசைக் கருவிகளை இசைக்கும் பயிற்சி.

2



நீச்சல்!

* ஒரு பொருளை மற்றொரு பொருள் போல தோன்றும்படி செய்தல்.
* பலவகையான சூதாட்டங்கள்.
* மருந்துப் பொருட்கள் தயாரித்தல்.
* நீச்சல் கலை.
* நடந்த செயலுக்குக் காரண காரியங் களோடு விளக்கம் அளித்தல்.

14

* சித்திரம் வரைதல், எழுதும் பயிற்சி.
* குதிரை ஏற்றம்.
* தெய்வச் சிலைகளுக்கு மலர் களாலும், அரிசியாலும் அலங்காரம் செய்தல்.
* மலர்களைக் கொண்டு படுக்கை தயாரித்தல்.



சித்திரம் வரைதல்!

3


13
பன்மொழிப் பயிற்சி!
அஷ்டாவதானம்.
கவிதை எழுதும் பயிற்சி.
தத்துவ நூல்களில் தேர்ச்சி.
கவிதையின் அமைப்பை மாற்றியும் மறைத்தும் சொல்லும் திறமை.
பன்மொழிப் பயிற்சி, தாய் மொழியில் தேர்ச்சி.


பல், நகம், கேசம், துணிகள் ஆகிய வற்றுக்கு வண்ணம் பூசுதல்.
கண்ணாடி அலங்காரம்.
ஜலதரங்கம் வாசித்தல்.
படுக்கை விரிக்கவும், படுப்பதற்கு வசதி யான விரிப்புகள், திண்டுகள் போடுதல்.
ஜலதரங்கம்!
4

12

மந்திரம்!



* அடுத்தவர்களுக்குப் புரியாமல் வார்த்தைகளை மாற்றிப் போட்டுப் பேசும் பயிற்சி.
* வண்டிகளைக் கட்டும் கலை.
* மந்திரச் சக்கரங்களை எழுதி, உரு ஏற்றி தாயத்து கட்டி விடுதல்.



* பச்சை குத்தி விடுதல்.
* வீட்டை ஒழுங்குபடுத்தி அலங்கரித்தல்.
* மாலை தொடுத்தல், மணிகளைக் கொண்டு அலங்கரித்தல்.
* கூந்தல் முடித்தல், கூந்தல் அலங்காரம் செய்தல்.

கூந்தல் அலங்காரம்!

5


11
சங்கேத வார்த்தை!
* கோழி, ஆடு, கவுதாரிகளை சண்டைக்குப் பழக்குதல்.
* கிளிகளுக்குப் பேசக் கற்றுக் கொடுத்தல்.
* சங்கேத வார்த்தைகளில் பயிற்சி.
* நவரத்தினங்கள், தங்கம், வெள்ளி ஆகியவற்றைப் பரீட்சித்துப் பார்க்கும் திறமை.


* நாடக நடிப்புப் பயிற்சி.
* காலணிகள் செய்யும் கலை.
* ஜால வித்தைகளில் பயிற்சி.
* அழகான ஆடை, நகைகள் அணிந்து அலங்கரித்துக் கொள்ளுதல்.
காலணி கலை!
8



தோட்டக் கலை!

* நகைகள், வைரங்களுக்குப் பட்டை தீட்டுதல்.
* வேதியியல் உலோக இயல் பற்றிய அறிவு.
* குடும்பம் நடத்துதல்.
* தோட்டக் கலை.
* ஒப்பனைக் கலை.



சமையல் கலை!

* வாசனைப் பொருட்களைத் தயாரித்தல்.
* கைகளைப் பயன்படுத்தி, தந்திர வேலைகள் செய்தல்.
* சமையல் கலை.
* சுவையான பானங்கள் தயாரித்தல்.



9

கை வேலைப்பாடு!

* தையல், பின்னல் வேலை.
* பஞ்சு, நூல்களைக் கொண்டு பறவை, மலர்க்கொத்து செய்தல்.
* விடுகதைகளை விடுவித்தல்.
* கவிதை நடையில் கேட்கும் கேள்விக்கு கவிதையிலேயே பதில் அளித்தல்.




8

போர்ப் பயிற்சி!

* அபிநயம் காட்டுதல்.
* வில், வாள், கம்பு தேர்ச்சி.
* சந்த அமைப்பு கெடாது கவிதை படித்தல்.
* உச்சரிக்க முடியாத சொல் தொடரை அறிந்திருத்தல்.

வாழ்வின் பயன்!

ஆர். காஞ்சனா



முன்னொரு காலத்தில் ஒரு பெரிய திடலில் இரண்டு மரங்கள் வளர்ந்திருந்தன. ஒன்று அரச மரம், மற்றொன்று கருவேல மரம். கருவேல மரம் பிறவியிலேயே மிகவும் கரடு முரடாக இருந்தது. அதன் உடல் முழுவதும் முட்கள் நிறைந்து இருந்தன. மேலும், அது மிகுந்த கர்வம் உடைய தாக விளங்கியது.

வெயில் காலத்தில், இங்கும் அங்கும் அலைந்து திரிந்து இரை தேடிக் களைத்துப்போன பறவைகள், களைப்பைப் போக்கிக் கொள்ள அந்தக் கருவேல மரத்தின் கிளைகளில் வந்து அமரும். கர்வம் கொண்ட அம்மரம் தனது கிளைகளை அசைத்து முட்களால் குத்திக் குத்தி பறவைகளை விரட்டும். அப்பறவைகள் வந்து தன் கிளைகளில் கூடு கட்டுவதை

அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் மூன்றாவது பரிசு ரூ.250/- பெறும் கதை - 1

யும் அனுமதிக்கவில்லை.

அருகில் வளர்ந்திருந்த அரச மரம், கருவேல மரத்துக்கு நேர் எதிராக விளங்கியது. தனது கிளைகளில் வந்து அமரும் பறவைகளை வரவேற்றது. அவற்றைத் தனது கிளைகளில் கூடு கட்டிக் கொள்ள அனுமதித்தது. பலருக்கும் உதவி செய்யவேண்டும் என்ற விருப்பம் கொண்டிருந்தது. அதன் நற்பண்புகளைக் கண்ட எல்லாப் பறவைகளும் அடிக்கடி அதன் கிளைகளில் வந்து அமர்ந்து, பொழுதை இன்பமாகக் கழித்தன.

சதா சர்வகாலமும் அதன் கிளைகளில் பறவைகளின் மகிழ்ச்சி ஆரவாரம்தான். அதையெல்லாம் விரும்பாத கருவேல மரம், அரச மரத்திடம் ''என்னைப் பார், எத்தனை நிம்மதியாக இருக்கிறேன். பறவைகளுக்கு இடம் கொடுத்து விட்டாய், இப்போது எல்லாம் சேர்ந்து கும்மாளம் போடுகின்றன'' என்று கிண்டல் செய்தது. அரச மரம் அதையெல்லாம் காதில் வாங்குவதே இல்லை.

ஒருநாள் அந்த நாட்டு மன்னனின் அரண்மனை சமையலறையில் அடுப்பெரிக்க விறகு தேவைப்பட்டது. மன்னன் இரண்டு ஆட்களை



அனுப்பி, நல்ல மரமாகப் பார்த்து வெட்டி வரச் சொன்னான். அந்த இரண்டு பேரும் கோடாரியுடன் கிளம்பினார்கள்.

அவர்கள் அந்த அரச மரத்தையும் கருவேல மரத்தையும் பார்த்துவிட்டு அங்கு வந்தனர். ஒருவன் "இந்த இரு

"இந்த மரம் பல உயிர்களுக்குப் பயனுள்ளதாக விளங்குகிறது."

மரங்களில் நாம் எதை வெட்டலாம்? பார்த்துச் சொல்'' என்றான்.

உடனே அடுத்தவன், ''எதை வேண்டுமானாலும் வெட்டு. நமக்கு வேண்டியது அடுப்பு எரிக்க விறகு. அது கருவேல மரமாக இருந்தாலென்ன? அரச மரமாக இருந்தாலென்ன? இரண்டும் ஒன்றுதான்'' என்றான்.

அதற்கு முதலாமவன், ''அரச மரத்தைப் பார். அதில் நிறைய பறவைகள் வந்து அமர்ந்துள்ளன. தவிர மரம் முழுவதும் குருவிக் கூடுகள் நிறைந்துள்ளன. அதை நாம் வெட்டி அத்தனை கூடுகளையும் அழிப்பானேன்? இந்த மரம் பல உயிர்களுக்குப் பயனுள்ளதாக விளங்குகிறது. இந்தக் கருவேல மரத்தைப் பார். இதனால் யாருக்கு என்ன பயன்? இது இருந்து என்ன ஆகப் போகிறது? வெட்டு இதை'' என்றவாறு கோடாரியால் கருவேல மரத்தை ஓங்கி ஒரு போடு போட்டான்.

அடுத்தவனும் சேர்ந்துகொண்டான். கருவேல மரத்துக்கு மிகவும் வேதனையாக இருந்தது. பறவைகள் தங்குவதற்கு இடம் அளிக்காமல் போனது எவ்வளவு பெரிய தவறு என்பது இப்போது அதற்குப் புரிந்தது. ○



வின்னர்ஸ்!

விடையைச் சொல்; பரிசை வெல் - 4ல் கலந்து கொண்டவர்களில் பெரும்பாலானோர் சரியான விடைகளை எழுதியிருந்தார்கள். அவர்களில் பத்து பேர் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, தலா ரூ 100/- வீதம் பரிசுத் தொகை பகிர்ந்து கொள்கிறார்கள்.

சரியான விடைகள்:

1. பட்டாம்பூச்சி,
2. 10,500,
3. சுந்தரவனக் காடுகளில் உள்ள மரம்,
4. ஜீகாரோ கேனோ,
5. பறவை ஆராய்ச்சியாளர்

பரிசு பெறுவோர்:

1. சோ.தன்யப்ரியா, கோவை.
2. என்.ஆர்.ரஞ்சனி, சென்னை.
3. ஆர்.திலீபன், இராசிபுரம்.
4. மு.ராம்பிரசாத், திருநெல்வேலி.
5. என்.எம்.தீபிகா, சென்னை - 21.
6. ஆர்.சுஹைல் அஹமது, கம்பம்.
7. ரி.சு.ரீகன்பென்கர், சென்னை - 66.
8. அ.ஶ்ரீவர்த்தினி, திருநெல்வேலி.
9. ரா.நாராயணன், பட்டுக்கோட்டை.
10. நா.வருண், காரைக்குடி.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்; கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி!

இரத்தினகரா!




* யூடோக்ஸஸ்

டியர் சில்ட்ரன்!

எப்படி இருக்கீங்க? நம்ம இந்தியப் பெருங் கடலை சமஸ்கிருத மொழி யில் 'இரத்தினகரா' என அழைக்கிறாங்க. உலகப் பெருங்கடல்கள் வரிசை யில் மூன்றாவது பெரிய கடல், 'இந்தியப் பெருங் கடல்'தான். வடக்கில் ஆசிய நாடுகளும், மேற் கில் ஆப்பிரிக்காவும், கிழக்கில் மலாய்த் தீபகற் பம், சுந்தா தீவுகள் மற்றும் ஆஸ்திரேலியாவும் உள் ளன. தெற்கில் தென் பெருங்கடலும் உள்ளது.

இந்தியப் பெருங்கடல் கடல்வழி வாணிபத் துக்குப் பயன்படுது. மத்திய கிழக்கு நாடு கள், ஆப்பிரிக்கா, கிழக்கு ஆசியா போன்ற பகுதிகளை ஐரோப்பா, அமெரிக் காவோடு இணைக்க பெருமளவில் பயன்படுது. இந்தியப் பெருங்கடல் பெருமளவிலான பெட்ரோல் ஏற்றிச் செல்லும் கடல் வழித்



* வாஸ்கோடகாமா

ஆப்பிரிக்காவின் தென்முனையிலிருந்து ஆஸ்தி ரேலியா வரை இந்தியப் பெருங்கடலின் நீளம் 10,000 கிலோ மீட்டர்கள்.

உலகின் நான்காவது மிகப் பெரிய தீவான 'மட காஸ்கர்' இந்தியப் பெருங்கடலில்தான் உள்ளது. அது மட்டுமல்லாமல் காமோராஸ், சீஷெல்ஸ், மாலத்தீவு, மொரீஷியஸ் மற்றும் இலங்கைத் தீவும் அமைந் துள்ளன. இந்தியப் பெருங்கடலில் கலக்கும் மிகப் பெரிய ஆறு ஸாம்பஸி. இந்த ஆற்றின் சிறப்பம்சம் என்ன தெரியுமா? உலகின் மிகப் பெரிய நீர்வீழ்ச்சி யான விக்டோரியா இந்த ஆற்றில்தான் இருக்கு. அடுத்த ஆறு 'ஷட் அல்-அரப்' (Shatt al - Arab). இது ஈரான், ஈராக் இரண்டு நாடுகளுக்குள்ளும் பாய்ந்து வருகிறது. அதற்கப்புறம் நம்ம சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா 'ஐராவதி' ஆறுகள்!

தளமாக உள்ளது. சவூதி அரேபியா, ஈரான், இந்தியா, மேற்கு ஆஸ்திரேலியா ஆகிய பகுதிகளில் 'ஹைட்ரோ கார்பன்' வளம் நிறைந்துள்ளது. இந்தியப் பெருங்கடல் கடற்கரை மணலில் கனிம வளங்கள் மிகுதியாக உள்ளன.

இந்தியப் பெருங்கடலைக் கடந்த முதல் கிரேக்கர் யார் தெரியுமா? 'யூடோக்ஸஸ்' (Eudoxus). ஹிப்பாலஸ் (Hippalus) என்பவர்தான் அரேபியா



* சிங்க மீன்

வுக்கும் இந்தியாவுக்குமிடையே கடல் வழியைக் கண்டுபிடித்தவர். 1497 ஆம் ஆண்டில் வாஸ்கோடகாமா நன்னம்பிக்கை முனை வழியாக இந்தியாவை அடைந்தார். கடல்வழியாக வந்த முதல் ஐரோப்பியர் இவர்தான்.

இந்தியப் பெருங்கடலில் அழகழகான சிங்கமீன்கள் (Lion Fish) இருக்கின்றன. அது மட்டுமில்லீங்க, பல வண்ணங்களில் நீரில் நீந்தும் வண்ணத்துப்பூச்சிகளாக குளோன் மீன்கள், கண்கவரும் ஏஞ்சல் மீன்கள் விளையாடி மகிழ்கின்றன. அழகிய ஒளி இழைகனாக ஜெல்லி மீன்கள் உள்ளன.

அழகழகான பவழப்பாறைகள். அதிலும் பலவகைகள் என இந்தியப் பெருங்கடல் நம் இந்திய தேசத்தோடு இணைந்து நிற்கிறதைப் பார்க்கும் போது நமக்குப் பெருமைதானே?

முனைவர் ஆசுரா



சோமுவின் தோழன்!
கதை, படம் : வீரமுடி
பள்ளியில் சோமு சாப்பிடும்போது ஒரு காகமும் வந்து சாப்பிடும். கொஞ்ச நாளில் காகம் ரொம்ப நட்பாகிவிட்டது.
கா கா கா
உனக்கும் பசிக்குதா? இந்தா... சாப்பிடு!
வா, எங்கள் வீட்டுக்குப் போவோம்!
காகம் நட்பாகி விட்டதால் சோமு கூப்பிட்டதும் அவனுடன் சென்றது.
அம்மா! இந்தக் காகம் என் நண்பன். இதுக்கும் சாப்பாடு போடுங்க!
சாப்பாடெல்லாம் கிடையாது. அதை அடித்து விரட்டு!
காக்கா! கவலைப்படாதே. என் சாப்பாட்டை உனக்குத் தருகிறேன்.
காகமும் சோமுவும் தொடர்ந்து நண்பர்களாகப் பழகி வந்தனர்.
சோமுவின் அம்மாவுக்கு இது பிடிக்கவில்லை. அவள் காகத்தை அடித்து விரட்டினாள்.
சூ! போ அப்படி! இனிமேல் இந்தப் பக்கமே வரக்கூடாது.


மறுநாள் சோமுவின் அம்மா கடைவீதிக்குச் சென்று கொண்டிருந்தாள். அப்போது...
திடீரென பின்னால் வந்த திருடன் அம்மாவின் கழுத்தில் இருந்த நகையைக் கண்ணிமைக்கும் நேரத்தில் பறித்துக்கொண்டு ஓடினான்.
ஐயோ... திருடன்! திருடன்!
ஆ... நம்ம சோமுவின் அம்மாவோட நகையைத் திருடிட்டு ஓடுறான். அவனை விடக்கூடாது!
வேகமாக வந்த காகம், திருடனைக் கொத்தி நகையை எடுத்துக்கொண்டு பறந்தது.
அட! இது சோமுவின் காகம் அல்லவா?
சோமுவின் அம்மாவிடம் நகையை சேர்த்தது.
நடந்த விஷயத்தை சோமுவிடம் அவன் அம்மா சொன்னாள்.
உன்னைத் திட்டியதுக்கும், விரட்டியதுக்கும் மன்னித்து விடு. இனி நீயும் எனக்கொரு பிள்ளை!

உங்கள் கைவண்ணம்!

ந.இசக்கியம்மாள்,
எட்டாம் வகுப்பு,
கு.ரா.அ.மே.நி.பள்ளி,
ரெட்டியார்பட்டி







அ.சார்லஸ்,
ஐந்தாம் வகுப்பு,
எஸ்.ஆர்.எஃப்.வித்யாலயா
மெட்ரிகுலேசன் பள்ளி, மணலி

ர.மீனாட்சி
ஏழாம் வகுப்பு,
அண்ணா ஜெம் அறிவியல்
பூங்கா பள்ளி,
சென்னை



டி.ஆர்.ஸ்ரீராம்,
ஆறாம் வகுப்பு,
டி.ஏ.வி.பெல் பள்ளி,
இராணிப்பேட்டை



ஆர்.பிரதீப்குமார்,
காமராஜ் மேல்நிலைப் பள்ளி,
நம்பியூர்.



கவிதைப் பூங்கா

சிட்டே! சிட்டே!

சிட்டே சிட்டே பறந்து வா
சிறகை விரித்துப் பறந்து வா
பட்டே பட்டே பறந்து வா
பாடம் படிக்கப் பறந்து வா!

கொட்டிக் கிடக்கும் நெல்மணிகள்
கொத்தித் தின்னப் பறந்து வா
வெட்டுக் கிளிகள் வேடிக்கையை
விரும்பிப் பார்க்க நீயும் வா!

எட்டு நாளாய்க் காணலியே
எங்கே போனாய் சிட்டே நீ?
வீட்டில் விசிறி நிறுத்திவிட்டேன்
விரைந்து சன்னல் வழியே
வா!

மு.பாலசுப்பிரமணியன்



அல்லி!

காலை மலரும் தாமரை
மாலை மலரும் மல்லிகை
ஞாலம் உறங்கும் இரவில்தான்
நாளும் மலரும் அல்லிப்பூ!

'அல்' என்றாலே இரவுதான்
இரவில் இதழ்கள் அவிழ்வதால்
அல்லி என்ற பெயரினை
அந்த மலரும் பெற்றதாம்!

தண்டு கொண்ட கொடியது
தாங்கி நிற்கும் அல்லியைக்
கண்டு கொண்ட வண்டுகள்
மொண்டு உண்டு தேன்பெறும்!

ரயில் வண்டி!



ரயிலுவண்டி பாருதம்பீ
ரம்மியமாய்ப் போகுது!
குயிலுபோலக் கூவிக்கிட்டே
குடுகுடுன்னு ஓடுது!

தண்டவாளப் பாதைமேலே
தடதடன்னு பறக்குது!
கண்டவர்கள் உள்ளமெல்லாம்
களிப்புகொள்ள வைக்குது!

தங்கம், கரி, தகரம், உரம்,
தானியங்கள் யாவையும்
பங்கமின்றி நாட்டுக்கெல்லாம்
பரிமாற்றம் செய்யுது!

காடு, மலை, பள்ளத்தாக்கு
குகைகளிலும் ஓடுது
நாடுகின்ற மக்களையே
நலமாய்ச் சுமந்து செல்லுது!

இரா. இராஜகுரு



உள்ளம் உயர உயரத்தான்
உயர்வு காணும்
வாழ்க்கைபோல்
வெள்ளம் உயர உயரத்தான்
அல்லிப் பூவும் உயருது!

சி. விநாயகமூர்த்தி

குட்டீஸ் கோகுலம்

வித்தியாசங்களைக் கண்டுபிடி!

இரண்டு படங்களுக்கிடையே உள்ள வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!





விடைகள்:

1. பலூன்கள், 2. கேக் ,3. வெள்ளை வாத்தின் கைவிரல், 4. ஆண் வாத்தின் நாக்கு, 5. சட்டைப் பித்தான்



பெயர் : ....

முகவரி : ....

....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்,) கல்கி பில்டிங்ஸ்,

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,

சென்னை - 600 032

சிற்பக்கலை


* முகம் பார்க்கும் பெண்!


* சுசீந்திரம் தூண்கள்


இசைக்கும் தூண்கள்!

இந்தியாவின் கலாசார சரித்திரத்தில் ஓவிய, சிற்பக் கலைகளுக்குத் தனி இடமுண்டு. தஞ்சாவூரில் இருக்கும் பெரிய கோயிலுக்குப் போயிருக்கிறீர்களா? அந்தக் காலத்திலேயே அவ்வளவு பிரம்மாண்டமான கோயிலை சோழச் சக்கரவர்த்தி 'ராஜராஜன்' எப்படிக் கட்டினான்? இத்தனைக்கும் தஞ்சையைச் சுற்றியுள்ள பகுதிகளில் மலைகள் எதுவும் கிடையாது. அப்படியானால், கோயில் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட பெரிய பெரிய கருங்கற்களை எங்கிருந்து கொண்டு வந்தார்கள்? எப்படிக் கொண்டு வந்தார்கள்?


* பெரிய நந்தி







* சூரியன் கோயிலில்...

* எல்லோரா ஓவியம்

இன்று இருப்பதுபோல, பளுவான பொருட்களை மேலே தூக்கிச் செல்லும் கிரேன்கள் அப்போது இல்லை. அப்படியானால், கோபுரத்தின் மேற்பகுதிகளுக்கு அந்தப் பெரிய கற்களை எப்படிக் கொண்டு போனார்கள்? அதைக் கட்டுவதற்கு எத்தனை தொழிலாளர்கள் இரவு பகலாக கடுமையாக உழைத்திருப்பார்கள்?

தஞ்சை பெரிய கோயில் கோபுரத்தில் ஆயிரக்கணக்கான சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அங்கே உள்ள நந்திக்கு, பெரிய நந்தி என்றுதான் பெயர். அந்த மெகா சைஸ் நந்தி ஒரே கல்லில் உருவாக்கப்பட்டுள்ளது. அது மட்டுமா? தஞ்சை பெரிய கோயிலின் உள்ளே, அந்தக் காலத்தில் தீட்டப்பட்ட கலைநயம் மிகுந்த ஓவியங்களும் இருக்கின்றன. இவற்றைக் கண்டு அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகள் மிகவும் வியந்து பாராட்டுகிறார்கள்.

கன்யாகுமரி மாவட்டம் சுசீந்திரத்தில் உள்ள கோயிலில் இசை எழுப்பும் தூண்கள் மிகப் பிரபலம். அந்தத் தூண்களின் ஒவ்வொரு இடத்திலும் தட்டுகிறபோது ஒவ்வொரு விதமான இசை எழும்பும். அது மட்டுமா? அங்குள்ள ஒரு விலங்கு சிற்பத்தின் ஒரு காதில் ஒரு குச்சியைச் செலுத்தினால், மற்றொரு காதின் வழியாக அது வெளியில் வரும். அந்தக்கால சிற்பிகளின் நுணுக்கமான வேலைத் திறனுக்கு இது ஒரு எடுத்துக்காட்டு!

தமிழ்நாட்டில் பிறந்த அனைவரும் தங்கள் வாழ்க்கையில் ஒருமுறையாவது மாமல்லபுரத்துக்குச் சென்று, பல்லவ மன்னர்களின் கலை ஆர்வத்தின் வெளிப்பாடாக இன்றும் சாட்சி சொல்லிக் கொண்டிருக்கும் சிற்பங்களைக் கண்டு ரசிக்கவேண்டும். அங்குள்ள கடற்கரைக் கோயிலும், ஐந்து ரதங்களும், இதர சிற்பங்களும் ஏராளமான அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கின்றன.

கர்நாடக மாநிலத்தில் உள்ள இரண்டு முக்கிய இடங்கள்

கௌதம்ராம்

பேலூர், ஹளபேட், இவை ஹொய்சால மன்னர்களின் காலத்தில் உருவான நகரங்கள். இங்கே உள்ள கோயில்களின் சிறப்பு அவற்றில் வடிக்கப்பட்டுள்ள சிற்பங்கள்தான். இங்கே உள்ள கோயில்கள் பன்னிரண்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்டவை. இந்தக் கோயில்களின் ஒவ்வொரு அங்குலத்தையும் கலை நயம் மிகுந்த சிற்பங்கள் அலங்கரிக்கின்றன. முக்கியமாக, கண்ணாடியில் முகம் பார்க்கும் மங்கை, நங்கையும் கிளியும், குரங்கைக் கண்டு மிரளும் பெண், வேட்டைக்காரப் பெண் என்று மனித முகபாவங்களைத் தத்ரூபமாக வெளிப்படுத்தும் ஏராளமான சிற்பங்களைப் பார்க்க ஆரம்பித்தால் நேரம் போவதே தெரியாது. பெரிய சிற்பங்கள் தவிர, கோயிலின் வெளிப்புறக் கற்சுவரில் வரிசையாக இருக்கும் சின்னஞ்சிறு யானை, குதிரை, இதர விலங்குகள் ஆகியவற்றைப் பார்த்து ரசித்துக் கொண்டே இருக்கலாம்.

கர்நாடக மாநிலத்தில் உள்ள இன்னொரு முக்கிய இடம் சரவண பெளகொள. இங்கே உள்ள கோமதேஸ்வரரின் மிக உயரமான சிலை மிகவும் பிரமிப்பூட்டுவது. ஐநூறு படிகள் கொண்ட ஒரு சிறு மலையின் மீது உள்ள கோமதேஸ்வரரின் சிலையின் உயரம் ஐம்பத்து ஏழு அடி. மலைமீது ஏறி, கோமதேஸ்வரர் காலடியில் நின்று முழு சிலையையும் அண்ணாந்து சில நிமிடங்கள் பார்த்தால் கழுத்து வலிக்கும். இங்கே பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை கோமதேஸ்வரருக்கு நடக்கும் அபிஷேகம் மிகவும் பிரபலமானது. நாடெங்குமுள்ள பக்தர்



★ கோமதேஸ்வரர்



★ பேலூரின் கலைத்திறன்






★ ராஜஸ்தான் அரண்மனை

கள் ஆயிரக் கணக்கில் இங்கே கூடுவார்கள்.

தெற்கில் இப்படியெனில் வடக்கில், ஒரிசா மாநிலம் கோனார்க்கில் உள்ள சூரியன் கோயில் மிகவும் புகழ் பெற்ற ஒன்றாகும். அங்குள்ள சிற்பங்கள் அற்புதமானவை.



✱ மாமல்லபுரம்

ராஜஸ்தான் மாநிலம் அரண்மனைகளுக்குப் பெயர் பெற்றது. ராஜபுத்திர மன்னர்கள் கட்டி வைத்த பிரம்மாண்டமான அரண்மனைகளைப் போல இன்று நம்மால் கட்ட முடியுமா என்பது சந்தேகம்தான். இன்று அந்தப் பெரும் அரண்மனைகளில் பல, பாரம்பரிய நட்சத்திர ஓட்டல்களாக மாறிவிட்டன!



✱ கலை நுணக்கம்...

ஓவியக்கலையை எடுத்துக் கொண்டால், அஜந்தா, எல்லோரா ஓவியங்கள் இன்றும் பண்டைய ஓவியக் கலையின் பெருமையை பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. மும்பையில் உள்ள எலிபென்டா குகையில் தீட்டப்பட்டுள்ள பிரம்மாண்டமான ஓவியங்கள் காண அரிதானவை.

✱ பிரம்மா, விஷ்ணு, சிவன்...



டெல்லியில் உள்ள குதுப்மினார், ஹைதராபாதில் உள்ள சார்மினார் போன்றவை மொகலாயர்கள் காலத்தில் உருவாக்கப்பட்ட கலைப் படைப்புகள். குதுப்மினார் வளாகத்தில் ஒரு பழங் காலத்து இரும்புத்தூண் உள்ளது. பல நூற்றாண்டுகள் கடந்தும்கூட இந்த இரும்புத்தூண் துருப்பிடிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தற்காலிக சிற்பக் கலைக்கு எடுத்துக் காட்டாக கன்யாகுமரி கடற்கரையிலுள்ள 133 அடி திருவள்ளுவர் சிலை விளங்குகிறது. ●

கதைப் பாடல்

காகம் ஒன்று மரத்திலே
கூடு கட்டி வாழ்ந்ததாம்
கூட்டினுள்ளே குஞ்சுகள்
குதூகலமாய் இருந்ததாம்.

இரையைத் தேடி காக்கையும்
எங்கோ பறந்து சென்றதாம்
சமயம் பார்த்து பருந்துமே
கிளையில் வந்து அமர்ந்ததாம்

"குஞ்சுகளே! குஞ்சுகளே!
வெளியே வந்து பாருங்க
அழகா நடனம் ஆடறேன்
அதனைப் பார்க்க வாருங்க.





புத்திசாலிக் குஞ்சுகள்!



ஆற்றில் நீர் ஓடுது
அந்த அழகைப் பாருங்க.
வானில் பறக்கும் விமானம்
வந்தே நீங்க பாருங்க''

என்று பருந்து சொன்னதாம்
எச்சில் நாவில் ஊர்ந்ததாம்
மூன்று குஞ்சுகளில் ஒன்றுதான்
முதலில் போக நினைத்ததாம்.

அப்போ ஒரு குஞ்சுமே
அதனைத் தடுத்து நின்றதாம்
''அண்ணா கொஞ்சம் நிற்பாயே
அம்மா சொன்னதை நினைப்பாயே

எதிரிகள் தேடி வருவரே
ஏமாற்றிப் புசித்திட நினைப்பரே
உஷாராய் நாமே இருந்திடணும்
உண்மை எதுவென அறிந்திடணும்''

தம்பிக் குஞ்சு சொன்னதும்
தவற்றை மற்றவை உணர்ந்தனவே
நன்றாய் உள்ளே நகர்ந்தனவே
நயமாய் பதிலை உரைத்தனவே

''அம்மா திரும்பி வரட்டுமே
அப்போ நாங்கள் வருகிறோம்
இப்போ நீங்கள் போவீரே
இதிலே மாற்றம் இல்லையே.''

ஏமாற்ற நினைத்த பருந்துமே
ஏமாந்து தனியே நின்றதே
வாட்டம் கொண்ட முகத்துடன்
வானில் பறந்து மறைந்ததே!

ஆர். ரத்தினசாமி

வண்ணம் தீட்டுங்கள்!

இந்தப் படத்தை உங்கள் கைவண்ணத்தால் அழகுபடுத்துங்கள்!



கதகளியில் ஷேக்ஸ்பியர்!



* மணிப்புரி



* பரத நாட்டியம்

ஜி.எஸ்.எஸ்.

பரத நாட்டியம்!

பாவம், ராகம், தாளம் ஆகிய மூன்று வார்த்தைகளின் முதலெழுத்துக்களின் இணைப்பு என்று பரதத்தைக் கூறுவார்கள். தமிழ்நாட்டின் அற்புதக் கலை இது. தொடக்கத்தில் சிவன் கோயில்களில் ஆடப்பட்டது. நாளடைவில் கோயில் மட்டுமின்றி அரச சபைகளிலும் ஆடத் தொடங்கினார்கள். சிதம்பரத்தில் நடராஜர் பரதம் ஆடியதாகச் சொல்வார்கள். பரத முனிவர்



எழுதிய 'நாட்டிய சாஸ்திரத்தை' அடிப் படையாகக் கொண்டு உருவான நடனம் என்பதுண்டு!

மணிப்புரி!

மணிப்பூர் பகுதியின் நடனம். கிருஷ்ணர் - ராதை ஆடிய ராசலீலா நடனம்தான் இதன் அடிப்படை என் பார்கள். பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு இளவரசி 'தோய்பி' மற்றும் அவரது துணைவர் 'கம்பா' ஆகியோர் கண்ணனின் ராச லீலா வகையிலான மணிப்புரி நடனத்தை புகழ்பெற வைத்தனர் என் பார்கள். வெகுவேகமான அசைவுகள், நுட்பமான பாவங்கள், மனத்தைக் கவரும் வேக இசை, வண்ணமயமான ஆடைகள் ஆகியவற்றின் மூலம் மணிப்புரி நடனம் இன்றும் புகழ்பெற்று விளங்குகிறது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்துதான் இந்த நடனத்தை மேடையில் ஆடுகிறார்கள். மணிப்புரி நடனம் ஒரு விஷயத்தில் மற்ற வகை நடனங்களிலிருந்து மிகவும் மாறுபட்டது. இதில் பாதம் ஒரு போதும் வேகமாகத் தரையைத் தொடக்கூடாது!



✱ கதகளி



✱ குச்சுபுடி

கதகளி!

கேரளாவின் சிறப்பு மிக்க நடனம் இது. நடனம் என்பதைவிட நாட்டிய நாடகம் என்பதுதான் அதிகப் பொருத்தம். ராமாயணம், மகாபாரதம் போன்ற புராணக் கதைக் காட்சிகளைத்தான் நாட்டிய நாடகமாக்குவார்கள். ஆனால், சமீபத்தில் புதுமைகளையும் புகுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். ஷேக்ஸ்பியரின் 'கிங் லியர்' நாடகம்கூட கதகளியில் இடம் பெற்றது! கதகளி என்பது ஆண்கள் மட்டுமே ஆடும் நடனம். பெண் பாத்திரங்களையும் ஆண்கள் தான் ஏற்பது வழக்கம். ஆனால், சமீப காலமாக பெண்களும் பங்கு பெறுகிறார்கள். உடல் முழுக்க நிரம்பியிருக்கும் வண்ணங்கள், ஆடைகள், ஆகியவற்றையும் மீறி இந்தக் கலைஞர்களின் ஒவ்வொரு தசை அசைவையும் கண்டு ரசிக்க முடியும் என்பது

கால் விரல்களால் தாம்பாளத்தைப் பற்றியபடி அசைந்து ஆடும் நடனமும் குச்சுபுடியின் ஒரு பகுதிதான்!

தான் கதகளியின் சிறப்பு. கதகளி நடனக்காரர் நிகழ்ச்சியின்போது ஒருபோதும் பேசக் கூடாது!

ஒடிசி!

கலிங்கதேசம் என்று அறியப் பட்ட ஒரிசாவின் புகழ்பெற்ற நடன வகை இது. ஒரிசாவிலுள்ள பூரி ஜெகன்னாதர் ஆலயம், கொனார்க் ஆலயம், புவனேஷ்வரிலுள்ள லிங்க ராஜா ஆலயம் ஆகியவை மிக அற் புதமான சிற்பங்கள் நிறைந்தவை. இந்த ஆலயங்கள் இசை, நடனம் ஆகியவற்றுக்கும் முக்கியத்துவம் கொடுத்தன. எனவே, ஒடிசி அங்கு செழித்து வளர்ந்தது. கண்ணனுக் குரிய 'த்ரிபங்கி' (உடலை மூன்று பகுதிகளாக வளைப்பது), ஜகன்னாத ருக்குரிய 'சௌகா' (உடலை நான் காக வளைப்பது) ஆகியவை ஒடிசி யின் சில முக்கிய ஆடல்நிலைகள்.



* ஒடிசி

குச்சுபுடி!

குச்சுபுடி என்பது ஆந்திர மாநி லத்தில் கிருஷ்ணா மாவட்டத்தில் உள்ள ஒரு சின்ன கிராமம். அங்குள்ள பிராமணர்களால் வளர்க்கப்பட்ட நட னக்கலை இது. நடனத்துக்கான பாடல் கள் பெரும்பாலும் தெலுங்கில்தான் இருக்கும். சிலசமயம் சமஸ்கிருதத் திலும் இருக்கும்.


பாமா கல்பம் என்பது இந்த நடன நிகழ்ச்சியில் மிக முக்கியமானது. கால் விரல்களால் தாம்பாளத்தைப் பற்றியபடி அசைந்து ஆடும் நடனமும் குச்சுபுடியின் ஒரு பகுதிதான். இதன் பெயர் தரங்கம்.

கதக்!

வட இந்தியாவில் புகழ்பெற்ற நட னம். கதா என்ற சமஸ்கிருத வார்த்தையி லிருந்து வந்தது கதக். அதாவது கதை என்று பொருள். அந்தக் காலத்தில், பல கதைசொல்லிகள் கோயில்களில் இசைக் கருவிகளுடன் கடவுளரின் கதைகளை காலட்சேபம் செய்தனர். அவர்கள் பாடிய பாடலுக்கான ஆடலாகத்தான் முதலில் கதக் உருவானது. ஆண், பெண் இருவருமே கதக் ஆடுவார்கள். ஜெய்ப்பூர் கரானா, லக்னோ கரானா, பனாரஸ் கரானா ஆகியவைதான் கதக்கின் முக்கிய மூன்று பாணிகளாக விளங்குகின்றன.



* கதக்



மந்திரக்

பீகாரின் தலைநகரமான பாட்னாவுக்கு முன்பு பாடலிபுத்ரம் என்ற பெயர் இருந்தது. அந்தப் பாடலிபுத்ரம் உருவான கதை.

மூன்று வட இந்திய இளைஞர்கள் தென்னிந்தியாவை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். இரவு நெருங்கும் நேரம். அப்போது அவர்களை நோக்கி ஒரு வயதான பெரியவர் வந்தார். ''இளைஞர்களே! யார் வீட்டுக்குப் போகிறீர்கள்?'' என்று கேட்டார். மூத்தவன், ''ஐயா! இந்த ஊரில் யாரையும் தெரியாது'' என்றான். உடனே பெரியவர், ''கவலைப்படாதீர்கள்! என் வீட்டில் தங்கிக்கொள்ளுங்கள். நான் உங்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தருகிறேன்'' என்று கூறினார். இளைஞர்களும்

செருப்பு! நெடுங்கதை

மகிழ்ச்சியுடன் அவர் வீட்டுக்குச் சென்றார்கள்.

சில நாட்கள் சென்றன. இளைஞர்கள் அவர் வீட்டில் நன்கு பழகிவிட்டார்கள். அந்த முதியவருக்கு மூன்று அழகான மகள்கள் இருந்தார்கள். ஒருநாள் அவர் இளைஞர்களிடம் தம் மூன்று மகள்களையும் திருமணம் செய்து கொள்ளும்படி வேண்டிக் கொண்டார். அவர்களும் மகிழ்ச்சியுடன் சம்மதித்தார்கள். முதியவர் தம் கடமை முடிந்தது என்று நிம்மதியாக காசிக்குச் சென்றுவிட்டார்.

சில மாதங்கள் கழிந்தவுடன் அந்த ஊரில் கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. உண்பதற்குக்கூட உணவின்றி மக்கள் தவித்தார்கள். மூன்று சகோதரர்களும் ஒரு நாள் இரவு யாரிடமும் சொல்லாமல் சென்றுவிட்டார்கள். காலையில் எழுந்தவுடன் தங்கள் கணவன்மார்களைக் காணாமல் மூன்று பெண்களும் அழுது புலம்பினார்கள். இரண்டாவது பெண் கருவுற்றிருந்தாள். இந்த நிலையில் யாருடைய துணையும் இல்லாமல் எப்படி வாழ்வது என்று திகைத்தார்கள். பின்னர் தங்களைத் தாங்களே தேற்றிக்கொண்டு வாழத் துவங்கினார்கள்.

அன்று இரவு சிவபெருமான் அவர்களுடைய கனவில் வந்து, ''இரண்டாவது சகோதரிக்கு ஒரு அழகான ஆண் குழந்தை பிறக்கும். அதற்கு 'புத்ரகன்' என்று பெயரிட வேண்டும். அது தினந்தோறும் தூங்கி எழுந்தவுடன் அதன் தலையணையின் அடியில் ஒரு லட்சம் பொற்காசுகள் இருக்கும். அவன் பெரியவனானதும் அரசன் ஆவான்'' என்று கூறினார். அதே போல் ஆண் குழந்தை பிறந்தது. மூன்று சகோதரிகளும் அன்பைப் பொழிந்து அவனை வளர்த்தார்கள். அந்த நாட்டின் அரசன் வாரிசு இன்றி இறந்து விட்டதால், வேறு அரசனைத் தேடிக் கொண்டிருந்த அமைச்சர்கள் புத்ரகனை அரசனாக்கினார்கள். புத்ரகனும் நல்ல முறையில் ஆட்சி செய்து வந்தான்.

ஒருநாள், மிகவும் ஏழைகளாகக் காணப்பட்ட நடு வயதில் உள்ள மூவர், அரண்மனைக்கு வந்து அரசனைச் சந்திக்க வேண்டும் என்று வேண்டினர். அவர்களில் ஒருவர், 'தான் அவனுடைய தந்தை என்றும் மற்ற இருவரும் அவனுடைய பெரிய மற்றும் சிறிய தந்தையர்' என்றும் கூறினார். குழப்பமடைந்த அரசன் தனது அன்னையரை அழைத்தான். முதலில் கோபப்பட்டாலும் பின்னர் தங்கள் கணவன்மார்களை ஏற்றுக்கொண்டனர். புத்ரகன் மிக மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தான்.

ஆனால், அவனுடைய தந்தையும் பெரியப்பா

“இவைகள் மந்திர சக்தி வாய்ந்தவை. பாத்திரத்தில் என்ன உணவு வேண்டுமானாலும் கிடைக்கும். குச்சியினால் எதை வரைந்தாலும் அது உண்மையாகிவிடும்!”

வும் சிறப்பாவும் அவனை நிம்மதியாக இருக்கவிடவில்லை. அவனைத் தந்திரத்தால் கொன்றுவிட்டு, தாங்களே ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்று தீர்மானித்தார்கள். ஒரு நாள் புத்ரகனுடைய தந்தை அவனிடம் வந்து, ''மகனே! காளி தேவிக்கு ஒரு வேண்டுதல் இருக்கிறது. நீ தனியே வந்து வேண்டுதலைச் செலுத்தவேண்டும். ஆகவே நீ மட்டும் இப்பொழுது கோயிலுக்கு வா'' என்று கூறினார்.

சிறிதுகூட சந்தேகப்படாத புத்ரகனும் தனியாகக் கோயிலுக்குச் சென்றான். கதவைத் திறந்தவன் அதிர்ந்தான். அங்கே உருவிய வாளுடன் நான்கு பேர் அவனைக் கொல்லத் தயாராக நின்றிருந்தனர். அவர்கள் யார் என்று கேட்டபோது, தன்னைக் கொல்வதற்காக தன் தந்தையும் அவருடைய சகோதரர்களும் பணம் கொடுத்து அவர்களை அமர்த்தியிருக்கிறாரகள் என்பதை அறிந்து கொண்டான். தான் அணிந்திருந்த விலை மதிக்க முடியாத மாலையை அவர்களிடம் கொடுத்து தப்பினான்.

புத்ரகன் காடுகளில் இரவும் பகலும் அலைந்து திரிந்தான். இரண்டு திடகாத்திரமான வாலிபர்கள் கடுமையாக மல்யுத்தம் செய்வதைக் கண்டு காரணத்தைக் கேட்டான். தங்கள் தந்தையார் இறந்துவிட்டதாகவும் அவருடைய உடமைகளுக்காக யுத்தம் செய்வதாகவும் அவர்கள் கூறினர். அப்படியென்ன உடமைகள் என்று கேட்டதற்கு அங்கே இருந்த ஒரு குச்சி, ஒரு பாத்திரம் மற்றும் ஒரு ஜோடி செருப்புகளைக் காட்டினார்கள். தன் துயரத்தையும் மறந்து சிரித்து விட்டான் புத்ரகன்.

''இந்த அற்பமான பொருட்களுக்காகவா இப்படி யுத்தம் செய்கிறீர்கள்?'' என்று கேட்டான். அதற்கு அவர்கள், ''இவைகள் மந்திரசக்தி வாய்ந்தவை. பாத்திரத்தில் என்ன உணவு வேண்டுமானாலும் எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கும். அந்தக் குச்சியினால் எதை வரைந்தாலும் அது உண்மையாகிவிடும். செருப்புகளை அணிந்து கொண்டு ஆகாயத்தில் பறக்கலாம்'' என்றனர்.

அதைக்கேட்ட புத்ரகன், ''ஏன் மல்யுத்தம் செய்கிறீர்கள்? ஓட்டப்பந்தயம் வைத்து யார் முதலில் இலக்கை எட்டுகிறார்களோ அவர்கள் இவற்றை எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றான். அந்தச் சகோதரர்களுக்கும் இந்த யோசனை பிடித்தது. புத்ரகனையே நீதிபதியாக வைத்து அவர்கள் ஓடத் தொடங்கினார்கள். இதுதான் சமயம் என்று புத்ரகன் அந்தக் குச்சியையும், பாத்திரத்தையும் எடுத்துக்கொண்டு, செருப்புகளை அணிந்துகொண்டு அங்கிருந்து பறந்து சென்றுவிட்டான்.

வெகு தூரம் பறந்தபின்னர் ஒரு



அறையாக இருக்கும் என்று யூகித்து, அந்த அறையின் ஜன்னலின் வழியே உள்ளே குதித்தான். சத்தம் கேட்டு எழுந்த பாடலி, பயந்து கத்துவதற்குள் அவளுடைய வாயைப் பொத்தி தன்னைப் பற்றிய எல்லா உண்மைகளையும் அவளிடம் சொல்லி, அவளைத் தான் மிகவும் விரும்புவதாகக் கூறினான். முதலில் திகைத்தாலும், புத்ரகனின் அழகிலும் தைரியத்திலும் தன்னைப் பறிகொடுத்த பாடலி அவனை மணக்கச் சம்மதித்தாள். அங்கேயே கந்தர்வ முறையில் திருமணம் நடைபெற்றது.

அன்றிலிருந்து தினமும் பாடலியின் அரண்மனைக்கு பறந்து வருவது புத்ரகனின் வழக்கமாகி விட்டது. ஆனால் ஒருநாள் சில சேடிப் பெண்கள் அவன் பாடலியின் அறையிலிருந்து பறந்து செல்வதைப் பார்த்து விட்டார்கள். உடனே அரசனுக்குத் தெரிவித்து விட்டார்கள். கடுங்கோபம் அடைந்த அரசன் அவனை கையும் களவுமாகப் பிடிக்கும்படி ஒரு வயதான சேடியை நியமித்தான்.

அடுத்தநாள் புத்ரகன் பாடலியின் அறையில் உறங்கிக்கொண்டிருந்த போது, அவனுக்குத் தெரியாமல் அவனுடைய வேட்டியில் அரக்கினால் ஒரு குறி இட்டுவிட்டாள். மறுநாள் விடிந்தவுடன் அரசனின் சேவகர்கள் புத்ரகனை வீட்டில் பிடித்து விட்டார்கள். புத்ரகன் எந்தவித

பழைய வீட்டின் முன் வந்து இறங்கினான். அந்த வீட்டில் வயதான பெண்மணி வசித்து வந்தார்.

புத்ரகன் தன் கதையைக் கூறினான். அந்தப் பெண்மணி அவனை உள்ளே அழைத்து உணவு கொடுத்து உபசரித்தார். யாரும் இன்றி தனியே வசித்து வந்த அவர், புத்ரகனைத் தன் மகனைப் போலவே அன்புடன் நடத்தினார். புத்ரகனும் அங்கேயே தங்கிவிட்டான்.

ஒருநாள் அந்தப் பெண்மணி ''புத்ரகா! நீ எப்போது திருமணம் செய்து கொள்ளப் போகிறாய்? இந்த நாட்டு இளவரசி பாடலி அழகிலும் புத்திசாதுரியத்திலும் உனக்கு இணையாக இருப்பாள்'' என்று கூறினார். ஆவலில் புத்ரகனும் ஒருநாள் இரவில் தன் மந்திரச் செருப்புகளை அணிந்துகொண்டு அரண்மனையை நோக்கிப் பறந்தான்.

மிக அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்த ஒரு அறையைப் பார்த்து, அதுதான் இளவரசி பாடலியின்



பகுதியில் இறங்கினான். மந்திரப் பாத்திரத்திலிருந்து உணவு வகைகளை வரவழைத்து இருவரும் உண்டார்கள். பாடலி கவலையுடன் ''இனிமேல் எங்கே இருப்போம்?'' என்று கேட்டாள். ஒரு புன்னகையுடன் புத்ரகன் தன் கையில் இருந்த

புத்ரகன் மந்திரக் குச்சியை எடுத்து ஒரு மாளிகையை வரைந்தான். அடுத்த நொடியில் அது உண்மையான அரண்மனையாகி நின்றது!

மான எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. கால்களில் செருப்பு போட்டுக் கொண்டு வருவதாகச் சொல்லி விட்டு உள்ளே சென்றவன், மந்திரப் பாத்திரத்தையும், மந்திரக் குச்சியையும் எடுத்துக்கொண்டு செருப்புகளை அணிந்துகொண்டு, ஆகாயத்தில் பறந்துவிட்டான். சேவகர்கள் செய்வதறியாது திகைத்து நின்றுவிட்டார்கள்.

புத்ரகன் நேராக பாடலியைச் சென்று சந்தித்தான். அவனை எதிர்பார்க்காத பாடலி திடுக்கிட்டாள். தங்களைப் பற்றிய உண்மை தெரிந்துவிட்டது என்று கூறிய புத்ரகன் அவளையும் தூக்கிக் கொண்டு அரண்மனையிலிருந்து பறக்கத் தொடங்கினான். வெகுதூரம் சென்ற பின்னர் ஏதோ ஒரு நிலப்

மந்திரக் குச்சியை எடுத்து ஒரு மாளிகையை வரைந்தான். அடுத்த நொடியில் அது உண்மையான அரண்மனையாகி எழுந்து நின்றது. பாடலியால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. பல மாளிகைகளையும் கோட்டை கொத்தளங்களையும் படை வீரர்களையும் குடிமக்களையும் இதே போல் புத்ரகன் உருவாக்கினான். தன் மனைவிக்காக உருவாக்கிய அந்த நகரத்துக்குத் தன் பெயரையும் சேர்த்து 'பாடலிபுத்ரம்' என்று பெயர் சூட்டினான். தன் மனைவி பாடலியுடன் அதற்கு அரசனாக பல ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான். தன் தாயாரையும், பெரியன்னை மற்றும் சிற்றன்னைகளையும் தன்னுடன் அழைத்து வந்து விட்டான். அவர்கள் நீண்ட காலம் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர். ●

குட்டீஸ் கோகுலம்

கீழே உள்ள நான்கு பேரும் என்னை மாதிரியே இருந்தாலும் சின்னச் சின்ன மாற்றங்கள் இருக்கு. அப்படியே என்னைப் போல இருப்பது யாருன்னு கண்டுபிடியுங்க!



என்னைப் போல யாரு?



1



2



3



4

தெரிந்துகொள்வோம்

கொடி

டிசம்பர் மாதம் இருபத்தி ஐந்தாம் தேதி உலகம் முழுவதும் ஏசு கிறிஸ்துவின் பிறந்த நாள் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. டிசம்பர் மாதத்தில் வரும் இதர முக்கிய தினங்களைப் பற்றித் தெரிந்துகொள்வோம்!

1971 ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஒரு போர் நடந்தது. அந்தப் போரின்போது பாகிஸ்தானுக்குச் சொந்தமான கராச்சி துறைமுகத்தின் மீது இந்தியப் படைகள் குண்டுவீசித் தாக்குதல் நடத்தி, பெரும் வெற்றி பெற்றது. அந்தத் தாக்குதலில் இந்தியக் கப்பற்படையின் பங்கு குறிப்பிடத்தக்கது. இந்தத் தாக்குதல் நடந்த தினம் டிசம்பர் நான்காம் தேதி என்பதால், இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் நான்காம் தேதி **கப்பற்படை தினமாகக்** கொண்டாடப்படுகிறது.



உலகத்தின் பல்வேறு நாடுகளிலும் நல்ல காரியங்கள் செய்வதற்காக நிதி திரட்டுவது என்பது ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தினத்தில் நடைபெற்று வருகிறது. அன்றைய தினம், சமூக ஆர்வலர்களும், பொதுச் சேவையில் ஈடுபட்டுள்ள தொண்டர்களும் வீதிகளில் வலம் வந்து, பொதுமக்களிடமிருந்து நிதி திரட்டி, அவற்றைத் தொண்டு அமைப்புகளிடமோ, அரசாங்கத்திடமோ ஒப்படைப்பார்கள். பொதுமக்கள் அளிக்கும் நன்கொடையைப் பெற்றுக் கொண்டதன் அடையாளமாக ஒரு கொடியை அளிப்பார்கள். அதனை சட்டையில் குத்திக்கொள்ளலாம். ஆண்டுதோறும், டிசம்பர் மாதம் ஏழாம் தேதி இந்தியாவின் **கொடி நாள்** கொண்டாடப்படுகிறது. அன்று திரட்டப்படும் நிதி, ராணுவத்தினரது நலனுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

ஆண்டுதோறும் டிசம்பர் மாதம் பத்தாம் தேதி **'மனித உரிமைகள் தினம்'** கொண்டாடப்படுகிறது. 1948ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பத்தாம் தேதி, ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைப் பிரகடனத்தை வெளியிட்டது. அதன் அடிப்படையில், 1950ஆம் ஆண்டு முதல் டிசம்பர் பத்தாம் தேதி மனித உரிமைகள் தினம் உலகம் எங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது. ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை, ஐ.நா.சபை, இந்த நாளில் மனித உரிமைக்காகப் பாடுபட்ட ஒருவருக்கு மனித உரிமைக்கான ஐ.நா. விருது அளித்து கௌரவிக்கிறது. அன்றைய தினம் ஐ.நா.சபையின் தலைமையகத்தில் கோலாகலமான கொண்டாட்டம் நடைபெறும்.

நான்!



எஸ். சந்திரமௌலி

இந்தியா ஒரு மத சார்பற்ற நாடு; இங்கு வாழும் மக்களில் பெரும்பான்மையானவர்கள் இந்துக்கள் என்ற போதிலும், எண்ணிக்கையில் குறைவான பிற மதங்களைச் சேர்ந்த மக்களுக்கு சில சிறப்புச் சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. சிறுபான்மை இன மக்கள் எனக் குறிப்பிடப்படும் இவர்களுக்கான பிரத்யேகமான சலுகைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதற்காகவும், அவர்களின் நலனைப் பேணவும் நம் நாட்டில் செயல்பட்டு வரும் அமைப்பு தேசிய சிறுபான்மை மக்கள் ஆணையம். அந்த அமைப்பு, டிசம்பர் மாதம் பதினெட்டாம் தேதியை **'தேசிய சிறுபான்மை இன மக்கள் தினமாக'** அறிவித்துள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமரான சரண்சிங் விவசாயக் குடும்பத்திலிருந்து வந்தவர். அவரது பிறந்த நாளான டிசம்பர் 23ஆம் தேதி, **விவசாயிகள் தினமாகக்** கொண்டாடப்படுகிறது.

சிரிப்பலை



''உன் நண்பனுக்கு கடிதத்தை ஏன்டா மெதுவா எழுதற?''

''என்னடா பண்றது, அவனுக்கு வேகமாகப் படிக்கத் தெரியாதே!''

- வி.திலக்ராஜ்குமார்



''டாக்டர்... வயித்துல ஏதேதோ சத்தம் கேட்டுக்கிட்டே இருக்கு. என்ன பண்ண லாம்?''

''காதை மூடிக்கங்க!''

- ஹெச். அஜிரா, கீழக்கரை

தாஜ்மஹால் எங்கே இருக்கு?



''கொசு ஏன் நம்மளைக் கடிக் குது?''

''நாம அதைத் திருப்பிக் கடிக்க மாட்டோம்கிற தைரியத்துலதான்!''

- ராம் ஆதிநாராயணன், தஞ்சாவூர்



''தாஜ்மஹால் எங்கே இருக்கு?''

''வரலாறு புத்தகத்தின் நாற்பத்தைந்தாம் பக்கத்துல சார்!''

- ராம்.ஆதிநாராயணன், தஞ்சாவூர்



''பெரிய துளை உள்ள பழம் எது?''

'''மா'துளை பழம்!''

- கு.அருணாசலம், தென்காசி

போட்டி

பரிசு ரூ.1000/-



இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்தி செய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள்.
ஆசிரியர் தீர்ப்பே இறுதி!
முடிவு தேதி 10.12.2007

அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

விடையைச் சொல்; பரிசை வெல் - 6

1. விசித்ர வீணையின் உடல் பகுதியைச் செய்ய பயன்படுத்தும் மரம் ....

2. விக்டோரியா மகாராணி திருமணம் செய்த ஜெர்மன் இளரசர் ....

3. ஜப்பானின் மொத்த பரப்பளவு ....

4. 'மனித உரிமைகள் தினம்' கொண்டாடப்படும் நாள் ....

5. முருகரிடம் முயல் செய்த வேண்டுதல் ....

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

கடித மாலை

'வின்னர்ஸ்' தலையங்கக் கட்டுரையைப் படித்தபோது உண்மையில் நாங்களும் 'அந்த ஆறு நண்பர்களோடு சேர்ந்து கிஷ்கிந்தா, தீம் பார்க்கினை நேரில் சுற்றிப் பார்த்த உணர்வினைப் பெற்றோம்!

- வி.வேல்முருகன்,
முத்தம்பட்டிகேட்



பலே!

கதை ஒருவர், படம் மற்றவர், தலைப்பு இன்னொருவர் என்று ஒரு கதைக்கு, மூன்று பேருக்கு சான்ஸ் கொடுத்து பரிமாறிய விதம் பரவசப்படுத்தியது. பலே!

- எல்.ஹரிராமபாலசுப்ரமணியன்,
டி.டி.டி.ஏ. நடுநிலைப் பள்ளி,
தேமாங்குளம் போஸ்ட், தூத்துக்குடி

பால், பழம், சர்க்கரை என்ற சிறுகதையின் விளக்கம், ஆரோக்கியத்தின் எவரெஸ்ட்டாக மனத்தில் பதிவானது!

- ஆர்.ஜி. கவியாணி, திருநெல்வேலி

நவம்பர் மாத கோகுலம் கண்டேன். 'திரும்பி வந்த குரங்கு' 'சிறுகதை இருப்பதைக் கொண்டு சந்தோஷமாய் வாழ

வள்ளியப்பா!

குழந்தைக் கவிஞர் அமரர் அழ.வள்ளியப்பா அவர்களின் 85 ஆவது பிறந்த தினமான நவம்பர் ஏழாம் தேதி குழந்தை இலக்கிய தினவிழா' வாகக் கொண்டாடப் பட்டது. அன்று காரைக்குடி 'குழந்தைக் கவிஞர் இல்ல'த்தில் விழா நடைபெற்றது. அழகப்பா மாண்டிஸோரிப் பள்ளி, மீனா நினைவுப் பள்ளி மற்றும் கவிமணி குழந்தைகள் சங்க உறுப்பினர்கள் பங்கு

வேண்டிய கூற்றினை உணரச் செய்தது.

- மு.சிவரஞ்சனி,
உறுப்பினர் எண்:179
ஸ்ரீ மகாதேவ குருஜி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, வலங்கைமான்

'என் பெயர் தென்றல்' ஒரு டஜன் அத்தியாயத்துடன் முற்றுப் பெற்றது. விறுவிறுப்பான சுவாரஸ்யக் கதையாக இருந்தது.

- ஆர்.ஜி.காயத்ரி, திசையன்விளை

தீபாவளி சிறப்புச் சிறுகதைகள், செய்திகள் யாவும் சுவையாகவும் சுவாரஸ்யமாகவும் இருந்தன. மீண்டும் அடுத்த இதழை எதிர்நோக்குகிறேன்.

- த.முருங்கப்பட்டி எல்.கே.நர்கீஸ், துறையூர்

பலே!!

பெற்ற கலை நிகழ்ச் சிகள் நடைபெற்றன.

- தேவி நாச்சியப்பன்



கோகுலம் தந்த குதூகலம்!

கோகுலம் நடத்திய 'போஸ்டரைச் சேகரிங்க' போட்டியில் வெற்றி பெற்று 'தீம்பார்க்' சென்ற குட்டீஸ்களைப் பற்றி கடந்த மாதம் படித்திருப்பீர்கள். அவர்கள் ஊருக்குச் சென்றதும், தங்கள் அனுபவத்தை கோகுலத்துக்கு எழுதியனுப்பி இருந்தார்கள். அவற்றில் இருவரின் அனுபவங்களை இங்கே சுருக்கமாகப் பிரசுரித்து இருக்கிறோம். மற்றவர்களுக்கும் நன்றி. தொடர்ந்து கோகுலம் படியுங்கள், நண்பர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள். மேலும் பல போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற வாழ்த்துகள்!

- ஆசிரியர்

எங்களுக்குக் கிடைத்த பரிசின்படி நாங்கள் கோகுலம் அலுவலகத்துக்கு வந்தோம். ஒருவரை ஒருவர் பார்க்காத நாங்கள், பழகி, நண்பர்கள் ஆகிவிட்டோம். கோகுலம் ஆசிரியர் எங்களிடம் நட்புடன் பேசினார். நீர் சறுக்கு விளையாட்டு மிகுந்த திகிலாக இருந்தாலும் மகிழ்வாக இருந்தது; ஒரு நாள் பழகி இருந்தாலும் நண்பர்களைப் பிரியும் பொழுது மனவருத்தம் மிகுந்திருந்தது!

- ஆர்.கலைச்செல்வி, விருகம்பாக்கம்

காலை முதல் மாலை வரை நேரம் சென்றதே தெரியவில்லை. என் பள்ளியில் உள்ள நண்பர்கள் அனைவரிடமும் நான் இதைப் பற்றிக் கூறினேன். இதைப் போன்று மீண்டும் ஒரு வாய்ப்பு கிடைத்தால், நான் கண்டிப்பாக அதிலும் கலந்து கொள்வேன்!

- ஏ.சாந்தி, தூத்துக்குடி

தேன் கனி மொழி

கருத்து, படம் : பிள்ளை




கோகுலம் சிறுவர் சங்கம்
உறுப்பினர்கள்

226) 

232) 



244) 

227) 

233) 

238) 

245) 

228) 

234) 

239) 

246) 

229) 

235) 

240) 

247) 

230) 


236) 

241) 

248) 

231) 

237) 

242) 

249) 



பெயர் மற்றும்
விவரங்கள்
25-ஆம் பக்கம்

243) 

250) 

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/06-08 · Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/06-08 · Registered as a Newspaper in Srilanka

